
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்



## ஆட்சியிழந்த இந்துத்துவம் அடங்காத வெறியில்...

படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்:

# தெலுங்கானா சொல்லும் கதைகள்

அந்தக் கொடுமைகளைப் பார்த்தவர்கள் எப்படி எதையும் செய்யாமல் இருக்க முடியாதோ, அதைப் போல அவைகளைப் பற்றிக் கேட்டவர்கள் யாரிடமும் சொல்லாமலும் இருக்க முடியாது — தெலுங்கானா போராட்டத்தைப் பற்றி மட்டுமல்ல, தெலுங்கானா இலக்கியத்தைப் பற்றியும் இப்படித்தான் சொல்ல வேண்டும். கதைதானே கேட்டு வைப்போம் என்று நெருங்குபவர்களை தெலுங்கானா பகுதிகளுக்கே அழைத்துச் சென்றுவிடுகின்றன. கதாபாத்திரங்களின் அனுபவங்கள் நம் இதயத்தைச் சூழ்ந்து கேள்வி கேட்கின்றன. வெறும் ரசிகனாக அனுபவித்து திரும்ப வழியில்லை, 'நீ என்ன சொல்லுகிறாய் இவைகளுக்கு?' யாரையும் நழுவவிடாமல் நச்சரிக்கிறது "தெலுங்கானா சொல்லும் கதைகள்" சிறுகதை தொகுப்பு.




நிஜாம் அதிகாரத்தின் கீழ் தெலுங்கானா மக்கள் சுரண்டப்பட்ட கொடுமைகள், இவற்றிற்கு எதிரான அவர்களது ஒன்றிணைந்த போராட்டம், வாழ்வில் நடந்த பண்பாட்டு மாற்றங்கள் என வளர்ச்சி நிலையை விளக்கும் விதமாக கதைகள் வரிசைப்படுத்தப்பட்டது தெலுங்கானாவின் போராட்டத்தை நாம் தொகுப்பாகப் புரிந்து கொள்ள உதவி செய்கிறது. ''நியாயம்'', ''நம்மூரில் கூடவா'' போன்ற கதைகளின் வழி துரைமார்களின் சுரண்டல் தன்மையும், மக்களின் ஆடு, கோழி, பெண்கள் உட்பட இரையாக்கப்படுவதும், ஜமாபந்திக்குப் போகும் நாட்டாமையின் கூண்டு வண்டிக்கு முன்னும், பின்னும் விளக்கு பிடித்து ஓடும் அடிமைச்சேவகன் ஓடிக் களைத்து ஒரு வாய்ச் சோறு திங்கவும் அனுமதியின்றி விரட்டப்படுவதும், இச்சூழ்நிலைமைகளுக்கெதிராக எதிர்ப்புக் குரல் உருவாவதையும் அறிவிக்கின்றன.

எதிர்ப்பு வலுவடைவதை ''விருந்து'' எனும் கதை இயல்பாகச் சித்தரிக்கிறது. ஊருக்கு வந்த மேலதிகாரிக்கு மக்கள் ஓசியில் எதையும் தர, உணவு தர மறுக்க, 'காசு கொடுத்து வாங்கலாம்' என ஒரு எடுபிடி ஆலோசனை கூறும்போது ''காசு கொடுத்து வாங்குவது எங்க பரம்பரையிலே இதுவரை நடந்ததில்லை, மானம் மரியாதை இல்லாதவன் செய்யிற வேல அது'' என ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பேசும் போது நிஜாம் அதிகார வர்க்கத்தின் சுரண்டல் வெறி பளிச்சிடுகிறது. 'சங்கச்சீட்டு' எனும் கதையில் நோயோடு போராடிக் கொண்டிருக்கும் தன் மகளை விட்டு லக்கி வலுக்கட்டாயமாக துரைமாரின் குமாஸ்தாவால் வயல் வேலைக்காக பிரம்பால் அடித்துப் பிரிக்கப்படுவதும், அவள் மகளின் இறப்பை 'இந்த அடிமை வாழ்வு தனக்கு வேண்டாம் என்பது போல் போய்ச் சேர்ந்தாள்' என்ற வார்த்தைகளில் சாவை விடவும் கொடூரமான நிஜாமின் சவுக்கடி ஆட்சியை நம்மாலும் சகிக்க முடியவில்லை.

இதற்குப் பிறகு வருகின்ற 'இளமையிலே', 'ஊர்வலங்கள்', 'விழிப்பு' போன்ற கதைகளைப் பார்க்கும் போது தெலுங்கானா போராட்டம் பொருளாதாரப் போராட்டமாக மட்டுமின்றி, சாதி, இழிவு, பண்பாட்டு அடிமைத்தனம் இவற்றுக்கெதிரான தன் போரைத் துவக்குவது தெரிகிறது. குறிப்பாக 'ஊர்வலங்கள்' கதையில் தாழ்த்தப்பட்டவர்கள், முடிதிருத்துபவர்கள், ரெட்டிகள் என பல சாதியினரும் ஒன்று திரள்வதும், குமரய்யாவின் தியாகத்தின் அடியொற்றி நிலத்தை மீட்க சபதமேற்கும் 'விழிப்பு' கதையில் ராமிரெட்டி படிப்படியாக தன் மேல்சாதி மனோபாவத்தைக் கைவிடுவதும் கலாச்சார தளத்திலும் தெலுங்கானா போராட்டம் நிகழ்த்தியிருக்கும் போராட்டங்களை அறியத்தரும் கதைகளாகும். 'கல்யாணம் செய்தார்கள்' என்ற கதையும் திருமணத்தில் நடக்கும் ஆணாதிக்க நடவடிக்கையைக் கண்டிக்கும் கெரில்லாக் குழுவினரின் பண்பாட்டுப் போரை அறிவிக்கும் கதையாகும். பொருளாதார, அரசியல் போராட்டம் மட்டும்தான் பொதுவுடைமையாளர்களின் வேலை என்று வெட்டிச் சுருக்குபவர்களைத் தட்டி எழுப்பும் விதமான தெலுங்கானா போராட்டம் தனது கலாச்சாரப் போராட்டத்தையும் அம் மண்ணில் பதித்திருப்பதை கதைகளின் களத்திலும் காண முடிகிறது.

'கெரில்லா' எனும் கதையில் ஒரு சராசரிப் பெண் எப்படி புரட்சிகரப் போராட்டத்தால் புடம்போட்டு வார்க்கப்படுகிறாள் என்பதை, அப்பெண்ணின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து கதையாய் படைத்திருப்பது 'பார்வதி' என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக பெண்ணுரிமையின் முழு அர்த்தத்தை விளங்க வைக்கிறது. சமுதாயத் தேவைகளுக்காக ஒரு பெண் தன்னை வெளிக் கொணர்வதும், புரட்சிப் பணிகளில் எதிரிகளை எதிர்த்த போராட்டத்தில் ஆண்களோடு இணைந்து போராடுவதையும் கதை இயல்பாகச் சித்தரிக்கிறது. இத்தொகுதியின் தலை சிறந்த படைப்பு இது எனலாம். ஆளும் வர்க்கம் என்னதான் ஆயுதம் தரித்திருந்தாலும் எப்போதும் மூளையில் 'பயத்தை' தரித்திருக்கிறது என்பதை 'சுவரொட்டி' என்ற கதை எளிமையாக உணர்த்துகிறது.

இப்படி தெலுங்கானாவின் சகலவிதமான அனுபவங்களையும் நமக்கு உணர வைப்பதில் கதைகள் வெற்றி பெறுகின்றன. இதனை ஈடேற்றும் மொழிபெயர்ப்பாளரின் எளிமை பாராட்டத்தக்கது.

1951-இல் தெலுங்கானா போராட்டத்தை காட்டிக் கொடுத்து, தலைமை ஓடி ஒளிந்தபோது, அதுவரை பின் தொடர்ந்த சில எழுத்தாளர்களும் இந்தத் திருப்பத்தைப் பதிவு செய்ய தொடராமல் ஓடிப்போனதை வாசிரெட்டி நவீன் வருத்தத்துடன் நினைவு கூர்கிறார். நாமும் இங்கு ஒன்றை அழுத்தமாகப் பதிய வேண்டியிருக்கிறது. அலையடிக்கிற 'இசம்' பக்கம் அலைந்து திரிகிற இலக்கிய விற்பன்னர்களிடமிருந்து, இதயமுள்ள படைப்பாளிகளை மீட்டெடுத்து மக்களது போராட்டங்களைக் கற்கச் சொல்லி மக்களுக்கானதைப் படைக்கச் சொல்லி அழைக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வகைப் படைப்புக்கு முன்னுதாரணமாக ''தெலுங்கானா சொல்லும் கதைகளை''ச் சொல்லலாம்.

★ சுடர் விழி

நூல் வெளியீடு:
தாமரைச் செல்வி பதிப்பகம்
விலை: ரூ. 45/-
கிடைக்குமிடம்:
கீழைக்காற்று,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லிஸ் சாலை, சென்னை - 2.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 12-13
● குரல்: 10-12, 1-2
● '96, மார்ச் – ஜூலை

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்
இரா.சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# ஆட்சியிழந்த இந்துத்துவம் அதிகாரவெறியில்....

பதிமூன்றே நாட்களில் அற்ப ஆயுசுடன், ஆட்சி அதிகாரம் பறிபோன நிலையில் ஆத்திரம், விரக்தி கொப்பளிக்க நாடெங்கும் உரத்த குரலெடுத்து ஒப்பாரி வைக்கின்றன, பாரதீய ஜனதா - சிவசேனா மற்றும் பிற இந்துமத பாசிச பரிவாரங்கள். அனுதாப, ஆதரவு அலை எழுப்புவதற்கு வேண்டி பதவி இழந்த பிரதமர் வாஜ்பாயியை அசுவமேத யாகக் குதிரையைப்போல நாடு முழுவதும் சுற்றவிட்டிருக்கின்றன. பாசிஸ்டுகளுக்கே உரிய கோயாபல்சு பாணியில் புளுகி வருகின்றன. எதிர்த்தரப்பினர் மீது வசைமாரி பொழிகின்றன. அதிகார ஆசை தமக்கு இல்லையென்றும், அரசுத் தலைவர், அழைத்ததாலேயே ஆட்சி அமைத்ததாகவும் பசப்புகின்றன. ஆட்சி அமைக்கும் உரிமையை மக்கள் தமக்கே அளித்ததாகவும், அதைபிற கட்சிகள் சதிசெய்து தட்டிப் பறித்துக் கொண்டதாகவும், தாம் அரசு அமைக்கக்கூடாது என்ற ஒரே கொள்கை அடிப்படையில் பிறகட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளதாகவும், ''தேச''த்திற்காகத் தாம் பெரிய தியாகம் செய்ததாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் ''குதிரை வியாபாரத்தில்'' இறங்குவதில் தமக்கு உடன்பாடில்லாததால் பதவி விலகியதாகவும், இன்ன பிறவாறும் புளுகுகின்றன.

உண்மையில் ஆட்சி அமைக்கவும், அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் இந்தப் பாசிச சக்திகள் எல்லா வகையிலுமான கீழ்த்தரமான முயற்சிகளில் ஈடுபட்டன. முதலாவதாக ஓட்டுப் பொறுக்குவதற்கும் பிற கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கும் வேண்டி இந்துவெறி பாசிஸ்டுகள் தமது உயிருக்குயிரான கொள்கைகளையே விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொள்ளத் துணிந்தனர். அல்லது அவற்றை மூடி மறைத்து பித்தலாட்டம் செய்ய முயன்றனர். ஓநாய் தன் நீண்ட வாலைக் கால்களுக்கிடையே ஒளித்து வைத்துக் கொண்டு நல்ல நாயாக நடிப்பதைப் போல வழக்கமான தமது இந்துத்துவக் கூச்சலின் சுருதியைக் குறைத்துக் கொண்டனர். அயோத்தியில் இராமன் கோவில் கட்டுவது, காசுமீருக்கான சிறப்புரிமை தரும் 370-வது பிரிவு அரசியல் சட்டத்தை அகற்றுவது, பொதுசிவில் சட்டம் கொண்டு வருவது ஆகிய தமது திட்டங்களைப் பற்றி கமுக்கமாக இருந்து கொண்டனர். ஆட்சியைக் காத்துக் கொள்வதற்காக தாம் வாந்தி எடுத்ததைத் தாமே உண்பது போல இரண்டு காரியங்களைப் பாரதீய ஜனதா - சிவசேனா கும்பல் செய்தது. பம்பாய் மதவெறிப் படுகொலைகளை விசாரிப்பதற்கு காங்கிரசு அரசு அமைத்த சிறீகிருஷ்ணா கமிசனைக் கலைத்துவிட்ட தனது முடிவை மாற்றிக் கொண்டு அதை மீண்டும் உயிர்ப்பித்தது. அமெரிக்காவின் என்ரான் கம்பெனிக்கு இலாப உத்திரவாதம் அளிக்கும் ஒப்பந்தத்தை அங்கீகரித்தது. ஒன்று தாம் வெறியர்கள் அல்லவென்று காட்டி ஆதரவு திரட்டவும் மற்றது சுதேசி மாய்மாலத்தை ஒதுக்கிவிட்டு ஏகாதிபத்திய, தரகு முதலாளிகளிடம் கோடி கோடியாக நிதி பெறவும் செய்தவை. முதலாவது பலிக்கவில்லை; இரண்டாவது கிட்டியும் அதன்நோக்கம் நிறைவேறவில்லை.


பிறகட்சிகளின் ஆதரவின்றித் தனிமைப்பட்டு பதவி இழந்தபோதும் ''ச்சீ... ச்சீ.. இந்தப் பழம் புளிக்கும்'' என்ற பாணியில் பேசுகின்றன. பாரதீய ஜனதா, சிவசேனா மற்றும் பிற இந்து பாசிச பரிவாரங்கள். பாரதீய ஜனதாவின் சார்பாக பெரும் தரகு முதலாளிகள் நேரடியாகவே களத்தில் இறங்கி சிதம்பரம் போன்றவர்களிடம் பேரம் பேசி நிர்பந்தித்தனர். பால்தாக்கரே, சத்ருகன் சின்ஹா, ''சோ'' ராமசாமி, ரஜினி-மூலம் கருணாநிதி, மூப்பனாருக்கு வலைவீசினர். அந்தக் கும்பலின் வசூல் நாயகன் பிரமோத் மகாஜன் எம்.பி.க்களை விலைக்கு வாங்குவதற்கென்றே நாடாளுமன்ற விவகார அமைச்சராக்கப்பட்டார். அவரும் இன்னொரு மந்திரி ஜஸ்வந்த் சிங்கும், இராஜஸ்தான் முதல்வர் செகாவாட்டும் பல அரசியல் தரகர்கள் மூலம் குதிரை வியாபாரத்தில் இறங்கினர். முரசொலி மாறன், சிதம்பரம், என்.டி. ஆர் மகன் அரிகிருஷ்ணன், அஜீத்சிங், கான்ஷிராம் போன்ற சிலர் உமிழ் நீர் வழியவிட்டனர். குதிரைகளை கையாள்வதில் தேர்ந்த சந்திரபாபு நாயுடு, கவுடா, முலயம், லல்லு, கருணாநிதி, மூப்பனார் கூட்டினால் அந்த முயற்சிகள் எல்லாம் முறியடிக்கப்பட்டன.

கொள்கை, சித்தாந்தம், திட்டம் ஆகியவற்றில் தமது தனித்தன்மையே தமது வளர்ச்சியின் அடிப்படை என்று பீற்றிக் கொண்ட இந்துமதவெறி பாசிஸ்டுகள், அவற்றின் காரணமாகவே தனிமைப்பட்டுப் போனார்கள். அகாலிதளம்,

படிப்பகம்

www.padippakam.com

அரியானா விகாசு மாஞ்சு, சமதாக் கட்சி ஆகியவற்றோடு சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்துக் கொள்ள முடிந்ததே தவிர பிற கட்சிகளிடமிருந்து ஆதரவு திரட்ட முடியாமல் போனார்கள். தமது தனித்தன்மைகளை விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொண்டாவது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும் முயன்றதைப் போலவே அனைவரும் ஏற்கத்தக்க மிதவாதி என்ற போர்வையில் வாஜ்பாயியை முன்னிறுத்தி ஆதாயம் தேடவும் முயன்றனர். பதவியில் நீடிக்க முடியாது என்பது உறுதியான நிலையில் வாஜ்பாயி தன் ஆர்.எஸ்.எஸ் வெறியை அப்பட்டமாகக் காட்டிவிட்டார். இருப்பினும், "பாரதீய ஜனதா ஆட்சி நீடிப்பதற்கு பிறகட்சிகள் வாய்ப்பளித்திருக்க வேண்டும், அந்தக் கட்சியால் மட்டுமே நிலையான ஆட்சியைத் தரமுடியும்" என்று, "சோ", அருண் செளரி போன்ற இந்துமத பாசிச ஊதுகுழல்கள் பரிந்துரைக்கின்றனர். இதுவே அவர்களின் பாசிசத் தன்மையை அம்பலப்படுத்தி விடுகிறது. அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள தேர்தல் அரசியல் முறைப்படி பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டுக்கு ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை மக்கள் அளிக்கவில்லை. எந்தக் கட்சி ஆளக்கூடாது, ஆளவேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பதுதான் ஜனநாயகம் என்றால் தமக்கு உடன்பாடில்லாத கட்சியின் ஆட்சியை நீக்கவும் உடன்பாடுடைய கட்சியை ஆதரிக்கவும் அரசியல் கட்சிகளுக்கு உரிமை உண்டு. தமக்கு உடன்பாடில்லாத கட்சி ஆட்சி மீது நம்பிக்கை தெரிவித்து வாக்கும் வாய்ப்பும் அளிக்கவேண்டும் என்று எப்படி கோர முடியும்?



பாரதீய ஜனதா - சிவசேனா கூட்டாட்சி வீழ்த்தப்பட்டாலும், இப்போதைய அரசியல் நிலைமைகளின்படி நாட்டில் இந்துமதவெறி பாசிசம் அதிகாரத்துக்கு வருவதற்கான அபாயம் நெருங்கிவிட்டிருக்கிறது என்றுதான் மதிப்பிட முடியும். ஏனென்றால் ஆட்சிக்கு வந்திருக்கும் கட்சிமாறிகள், பதவி வெறியர்கள், பிழைப்புவாதிகள், கிரிமினல் குற்றவாளிகளின் ஐக்கிய முன்னணி ஆட்சியும் நீண்டகாலம் நீடிக்காது. காங்கிரசுக் கயவாளிகளும் அதை நீடிக்க விடமாட்டார்கள். நாட்டின் வலுவான ஒரே கட்சி என்கிற முறையில் பாரதீய ஜனதா பெரும்பான்மையைப் பெற முடியாவிட்டாலும் மேலும் பலத்தைக் கூட்டிக் கொள்ள முடியும்.

மனித ரத்தத்தை கொடிய மிருகம் எதுவும் நரவேட்டையாட வெறியுடன் அலையும். அதைப்போல அதிகாரத்தைச் சுவைத்துவிட்ட இந்து மத வெறி பாசிஸ்டுகள் கைநழுவிப் போனதை மீட்க வெறி கொண்டலைகின்றனர். அவர்கள் ஜனநாயக நீதிநெறிகள், நாகரிக வழிமுறைகளுக்குள் நிற்கமாட்டார்கள்.

தனிப்பட்ட முறையில் வாஜ்பாய் நல்ல மனிதர், நெருங்கிய நண்பர் என்றும், பாரதீய ஜனதா தீண்டத்தகாத கட்சி அல்ல என்றும், தி.மு.க. போன்ற 'சமூக நீதி'க் கட்சிகளே அதனுடன் நெருங்கிப் போகத் துவங்கிவிட்டன.

அதிகார மையமாகிய வடக்கு, மற்றும் மேற்கு மாநிலங்களில் நிலை கொண்டுள்ள அக்கட்சியின் சமூக அடித்தளம் மேல் சாதி இந்துக்களும், பிற்பட்ட சாதிகளின் மேட்டுக் குடியினரும், உயர்கல்வி கற்றவர்களும் தாம் என்பதைக் கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றனர். நாடாளுமன்றத்தில் காவித் தலைப்பாகை சூட்டிக் கொண்டு வந்து ரௌடித்தனம் செய்த அதன் உறுப்பினர்கள் தேவபாடை (சமஸ்கிருத) யில் உறுதிமொழி எடுத்துக் கொண்டது அக்கட்சித் தலைமை எப்படி பட்டதென்பதைக் காட்டுகிறது. நாட்டின் அரசியல் நிலைமைகள் பாரதீய ஜனதா சிவசேனா கும்பலுக்குச் சாதகமாகவே உள்ளது. நாடு முழுவதும் காங்கிரசு செல்வாக்கிழந்து மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள கட்சியும் சிதறிப் போவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாகவே உள்ளன. ஐக்கிய முன்னணி, இடதுசாரிக் கூட்டணி கட்சிகளும் கலப்புக் கொள்கைகள், திட்டங்களைக் கொண்ட அவியல் ஆட்சியைத் தான் தரமுடியும். ஜெர்மனியில் இட்லரின் நாஜிக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது ஏறக்குறைய இம்மாதிரி அரசியல் நிலைமைகளே நிலவின. நாடு பல்வேறு இன, மொழி, பிராந்தியங்களாகப் பிளவுண்டு கிடப்பதற்கும், நிலையற்ற ஆட்சி நிலவுவதற்கும் மாற்றாக ஜெர்மானிய ஒருமைப்பாடு, தேசிய சோசலிசம் ஆகிய இன மேலாதிக்கம் ஆகியவற்றை முன்வைத்த சிறுபான்மையாக இந்த நாஜிக் கட்சியிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. அதே மாதிரி அரசு அமைப்பில் ஆதிக்கம் வகுக்கும் இந்தச் சக்திகளின் துணையுடன், பெரும்பான்மை பலம் பெற முடியாமற் போனாலும் கூட்டணிக் குழப்பம் தீரவும், நிலையான ஆட்சி அமையவும், அரசியல் நெருக்கடியை சமாளிக்கவும் ஒரே வழியெனச் சொல்லி பாரதீய ஜனதா விடமே ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட வாய்ப்புள்ளது. அது நிச்சயம் இந்துமதவெறியாகவே அமையும். ஜனநாயக, முற்போக்கு சக்திகள் என்று கூறிக் கொள்ளும் ஒட்டுக் கட்சிகள் எதுவுமே இந்த ஆபத்தை எதிர்கொள்வதற்குத் தயாரில்லை, துணியவுமில்லை. மனித ரத்தத்தை சுவைத்துவிட்ட கொடிய மிருகம் எதுவும் நரவேட்டையாட வெறியுடன் அலையும். அதைப் போல அதிகாரத்தைச் சுவைத்துவிட்ட பாசிஸ்டுகள் கைநழுவிப் போனதை மீட்க வெறி கொண்டலைகின்றனர். அவர்கள் ஜனநாயக நீதிநெறிகள், நாகரிக வழிமுறைகளுக்குள் நிற்கமாட்டார்கள். ஆகவே அவர்களைத் திருப்பித் தாக்கி முறியடிக்கும் வலிமை வாய்ந்த சக்தியை நாடாளுமன்ற அமைப்புக்கு வெளியே திரட்டுவதே இன்றைய கடமையாகும்.

பாரதீய ஜனதாவின் சார்பாக பெரும் தரகு முதலாளிகள் நேரடியாகவே களத்தில் இறங்கி - சிதம்பரம் போன்றவர்களிடம் பேரம் பேசி நிர்பந்தித்தனர். பால் தாக்கரே, சத்ருகன் சின்ஹா, "சோ" ராமசாமி, ரஜினி-மூலம் கருணாநிதி, மூப்பனாருக்கு வலைவீசினர்.



படிப்பகம்

www.padippakam.com



# பூலன் தேவி பன்வாரி தேவி



''பாரதிராஜாவின் கிராமங்களைப் பார்க்கும் போது 'அடடா... கிராமத்தில் பிறக்காமல் போனோமே' எனத் தோன் றும். பேண்டிட் குயின் படத்தைப் பார்த்த பின் நல்லவேளை கிராமத்தில் பிறக்க வில்லை என்று நிம்மதிப் பெருமூச்சு வரு கிறது'' என்றார் ஒரு நண்பர்.

உண்மையான கிராமத்தையும் 'செட்டிங்' மனிதர்களையும் பார்த்துப் பார்த்து ஏமாந்த கண்களை 'பேண்டிட் குயின்' கொஞ்சம் உறுத்தத்தான் செய்யும்.

கண்ணுக்கெட்டியவரை விரிந்து, பரந்து, வறண்டு கிடக்கும் மணற்குன்று கள், பொந்துகள், அவற்றின் நடுவே திசை தெரியாமல் சிக்கிக் கொண்ட சிறு சிறு கிராமங்கள்.

மனிதன் கடப்பதற்கரிய அந்த சம் பல் பள்ளத்தாக்கையும் கடந்து வந்து ஒவ் வொரு கிராமத்திலும் ஆட்சி செய்யும் மனுநீதி. அங்கே, இறுதித் தீர்ப்பு நாளுக் காகக் காத்திருப்பவர்களைப் போன்று, கண்களில் ஒளியிழந்த ஒடுக்கப்பட்ட சாதி மக்கள்.

பருவம் வராத பதினொரு வயதுச் சிறுமி பூலனைத் திருமணம் செய்து அழைத்துப் போக அவளது முறை மாப் பிள்ளை தேடி வரும் காட்சியுடன் படம் தொடங்குகிறது. பெற்றோரை விட்டு ஏன் பிரிக்கப்படுகிறோம் என்றே தெரி யாமல் கண்களில் மிரட்சியுடன் கணவ னைப் பின் தொடர்ந்து புகுந்தவீடு செல்கி றாள் பூலன்.

வயதுக்கு வரவில்லையென்றாலும் மருமகள் 'அந்தஸ்துக்கு' வந்துவிட்டத னால் சுமக்க முடியாத குடத்துடன் ஊர்க் கிணற்றில் தண்ணீர் சேந்தச் செல்கிறாள். விவரம் தெரியாமல் தாகூர் சாதியினர் வைக்கும் இடத்தில் தனது குடத்தை வைக்கிறாள். ''இது தாகூர்கள் (உயர்சாதி யினர்) குடம் வைக்கும் இடம்'' என்று குரலில் வெறுப்பை வரவழைத்துக் கொண்டு உறுமுகிறாள் ஒரு பெண். தலை யில் சுமந்த தண்ணீர்க் குடத்தைக் கவண் கல்லால் அடித்து உடைக்கிறார்கள் மேல் சாதிச் சிறுவர்கள்.

பகலில் சாதி ஆதிக்கத்தால் பட்ட காயம் தெறித்துக் கொண்டிருக்கையில், ஆண் ஆதிக்க வக்கிரத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட இரவு வருகிறது. கணவ னின் கண்களில் காமம். 'மனைவி' பூல னின் கண்களில் இன்னதென்று கூற முடி யாத பீதி. வீறிட்டலறும் பூலனின் குரலில் கணவனின் காமம் தணிகிறது. பாலியல் வன்முறையின் வலியைப் பூலனுக்கு உணர்த்திய முதல் இரவு அது.

> ''மனிதன் கடப்பதற்கரிய அந்த சம்பல் பள்ளத்தாக்கையும் கடந்து வந்து ஒவ்வொரு கிராமத்திலும் ஆட்சி செய்யும் மனுநீதி. அங்கே, இறுதித் தீர்ப்பு நாளுக்காகக் காத்திருப்பவர்களைப் போன்று, கண்களில் ஒளியிழந்த ஒடுக்கப்பட்ட சாதி மக்கள்''.

பிறகு அவள் பிறந்த வீட்டுக்கு ஓடி வருகிறாள். வயதும் கூடுகிறது. காட்டில் சுள்ளி பொறுக்கப் போன பூலனை, ஊர் நாட்டாமையின் மகன் துரத்துகிறான். அவனை அடித்து விரட்டுகிறாள் பூலன். விவகாரம் ஊர்ப்பஞ்சாயத்துக்கு வருகி றது. அவள்தான் தன்னை அழைத்ததாக குற்றம் சாட்டுகிறான் நாட்டாண்மையின் மகன். ''என்ன சொல்லி அழைத்தாள்?'' என்று கேட்கிறான் நாட்டாண்மை. அந்தப் பொய்யை சிரிப்பும் கேலியுமாக நாட்டா மையின் மகன் விவரிக்கத் தொடங்கியவு டனே, அங்கே கூடியிருந்த 'கீழ்சாதி' மக் களும், பூலனின் தந்தையும் அவமானத் தாலும் ஆத்திரத்தாலும் குமுறுகின்றனர்; தலை குனிகின்றனர்....

பிறகு ஒருநாள் பாபு குஜ்ஜார் என்ற மேல் சாதித் திருடனின் தலைமையிலான கொள்ளைக் கூட்டம் பூலனை வீட்டிலி ருந்து பிடித்துச் செல்கிறது. கொள்ளைக் கும்பலின் தலைவன் அவளை பலாத்கா ரம் செய்யும் போது அதே கூட்டத்தைச் சேர்ந்த விக்ரம் மல்லா அவனைச் சுட்டுக் கொன்று விடுகிறான். பூலன், பூலன் தேவியாகிறாள்.

சம்பல் பள்ளத்தாக்கில் தாகூர்களின் செல்வாக்கு வீழ்ந்துவிட்டதென்றும், கீழ் சாதி மல்லாக்களின் கொள்ளைக் கூட்டம் தான் கொட்டமடிக்கிறது என்றும் கூறி ஸ்ரீராம் என்ற தாகூர் சாதிக் கொள்ளை யனை உசுப்பி விடுகிறான் ஒரு போலீசு உயரதிகாரி.

விக்ரம் மல்லாவைச் சுட்டுக் கொல் கிறான் ஸ்ரீராம். பெஹ்மாய் எனும் தாகூர் கிராமத்தில் வைத்து அவனது கூட்டம் பூலன் தேவியை மாறி மாறிப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிக் குதறுகிறது. ஊரில் உள்ள தாகூர்களையெல்லாம் கூட்டி, ஊர் நடுவே பூலன் தேவியை அம் மணமாக்கி அவமானப்படுத்துகிறான் ஸ்ரீராம்.

அதன்பின் பூலன்தேவி தனக்கென ஒரு கூட்டத்தை மீண்டும் உருவாக்கிக் கொள்கிறாள். ஒருநாள் பெஹ்மாய் கிரா மத்திற்கு ஸ்ரீராம் வந்திருப்பதாகத் தகவல் கிடைக்கவே தனது கூட்டத்துடன் அங்கே வந்து ஸ்ரீராமைத் தன்னிடம் ஒப் படைக்குமாறு ஊர் மக்களைக் கேட்கி றாள். அவர்கள் 'தெரியாது' என்று கூறவே 20 பேரை ஊர் நடுவில் வைத்துச் சுட்டுத் தள்ளுகிறாள்.

தாகூர்களை 'மல்லா' சாதி கொள் ளைக்காரி ஒருத்தி கொன்றுவிட்டாள் என்றவுடனே சட்டம் ஒழுங்கு விழித்துக் கொள்கிறது. இன்றைய சமூக நீதிக் காவ லரும் அன்றைய உ.பி. முதல்வருமான வி.பி.சிங்கின் காவல் துறை 'மோதல் கொலை' என்ற பெயரில் நரவேட்டை நடத்துகிறது. இனிமேலும் உயிர்தப்ப முடியாது என்ற நிலைக்கு பூலன்தேவி ஆளாகிறாள். பூலன் தேவியைக் கொன் றுவிட்டால் மல்லா சாதியினரின் ஓட்டுக் களை இழக்க நேரிடும் என்பதால் சரண டைவுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பூலன் தேவி சரணடைகிறாள். தனக்கு ஆதரவாகக் குரலெழுப்பும் மக்கள் கூட் டத்தைக் கண்டு திகைக்கிறாள்.

'பேண்டிட் குயின்' தனிக்கைக் குழு வில் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்த போது பன்வாரி தேவி என்ற பெண் நீதி மன்றத்தில் சிக்கித் திணறிக் கொண்டிருந் தாள்.

★★

பன்வாரி தேவி - ராஜஸ்தான் அர சின் பெண்கள் முன்னேற்றத் திட்டத்தின்



படிப்பகம்

www.padippakam.com

கீழ் பணியாற்றும் ஒரு ஊழியர். உடன்கட்டையேற்றுதல், குழந்தை மணம் ஆகியவற்றை எதிர்த்தும் குடும்ப நலத்திட்டங்களை விளக்கியும் பெண்கள் மத்தியில் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்வது அவருக்கு இடப்பட்டிருந்த பணி. மாதச் சம்பளம் ரூ. 250.

தனக்கிடப்பட்டிருந்த பணியை உண்மையிலேயே நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணியதுதான் பன்வாரி தேவி செய்த குற்றம்.

குஜ்ஜார் எனும் உயர்சாதியைச் சேர்ந்த ராம்கரன் குஜ்ஜார் என்பவர் தனது ஒரு வயதுப் பெண்குழந்தைக்குத் திருமணம் செய்யத் திட்டமிட்டபோது, அது தவறு என்று அக்குடும்பத்தினருடன் வாதாடினாள் பன்வாரி. பயனில்லாமல் போகவே தனது அதிகாரிகளுக்குத் தெரிவித்தாள். அங்கிருந்து காவல் துறைக்குச் செய்தி போனது.

ராம் கான் குஜ்ஜாரின் வீட்டுக்குப் போலீசு வந்தது. ஆனால் அதற்குள் 'திருமணம்' நடந்து முடிந்துவிட்டது. வந்ததற்கு திருமண விருந்தைச் சாப்பிட்டு விட்டு போனார்கள் போலீஸ்காரர்கள்.

இருந்தாலும் தங்களை "அவமானப்படுத்திய" பன்வாரியை மன்னிக்க குஜ்ஜார்கள் தயாராக இல்லை. சரியாக ஆறே மாதங்களில் 22.9.92 அன்று, 38 வயதான பன்வாரி தேவியை, அவளது கணவன் முன்னால் (அவனைக் கட்டிப் போட்டு விட்டு) ஐந்து பேர் 'கற்பழித்தனர்.'

தனது குழந்தைக்கு மணம் செய்வித்த ராம் கரன் குஜ்ஜார், அவரது உறவினர்களான மூன்று குஜ்ஜார் சாதியினர் மற்றும் சிரவன் பாண்டா என்ற 70 வயது பார்ப்பான் - ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டவர்கள்.

மூன்றாண்டுகள் விசாரணை நடந்தது. பன்வாரிக்கு ஆதரவாக 19 பேர் சாட்சி கூறினர். பாலியல் பலாத்காரத்திற்கான நோக்கம் தெளிவாக நிறுவப்பட்டது; பன்வாரியும் அவளது கணவன் மோகனும் வாக்குமூலம் அளித்தனர்; பன்வாரியின் தொடைகள், கால்கள், தோள்களில் இருந்த காயங்களுக்கு மருத்துவச் சான்றிதழ் இருந்தது.

இவையன்றி பன்வாரி தேவி குறுக்கு விசாரணை செய்யப்பட்டாள். "கற்பழிக்கப்படும்போது உன் கைகளையும் கால்களையும் பிடித்துக் கொண்டவர்கள் யார்? கால்கள் எவ்வளவு விலகியிருந்தன? உள்ளாடை நனைந்ததா?" போன்ற எல்லாக் கேள்விகளுக்கும் பன்வாரி விடையளித்தாள் ஆத்திரத்தையும் அழுகையையும் அடக்கிக் கொண்டு.

**"பேண்டிட் குயின்" தணிக்கைக் குழுவில் அகப்பட்டுத் திணறிக் கொண்டிருந்த போது பன்வாரி தேவி என்ற பெண் நீதிமன்றத்தில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தாள்"**

கற்பழிப்பு எப்படி நடந்தது என்பதை 'துல்லியமாகத்' தெரிந்து கொள்வதற்காக பன்வாரியைத் தரையில் படுக்கச் சொல்லி சம்பவத்தை நடித்துக் காட்ட வைத்தார்கள் இரண்டு பெண் காவலர்கள்.

விசாரணை முடிவதற்குள் 6 நீதிபதிகள் மாற்றப்பட்டுவிட்டனர். பன்வாரி கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டாள். இத்தனைக்கும் பிறகு 'குற்றம் நிரூபிக்கப்படவில்லை' என்று கூறிய நீதிமன்றம் தனது தீர்ப்பில் அதற்கான காரணத்தைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டது:

"சாதி வேறுபாட்டையும் (அதாவது பன்வாரிதேவி கீழ்சாதிப் பெண் என்பதையும்) வயதையும் மறந்து ஒரு நாற்பது வயதுக்காரரும், 60 வயதுக்காரரும் 70 வயது பார்ப்பனர் ஒருவர் பார்த்துக் கொண்டு நிற்க, ஒரு பெண்ணின் மீது ஓநாயைப் போலப் பாய்ந்து கற்பழித்திருப்பார்களா? இந்தியக் கிராமத்தின் பாமர மனிதன் ஒருவன் இவ்வளவு கேவலமாக நடந்து கொள்வானா? பாரதக் கலாச்சாரம் இன்னும் அவ்வளவு மோசமாகத் தாழ்ந்து போய்விடவில்லை."

தீர்ப்பு வந்ததுதான் தாமதம். 'பெருமைமிக்க புராதனமான' பாரதக் கலாச்சாரத்தின் பாதுகாவலர்கள் அதன் 'உன்னதத்தை' உலகிற்கு மீண்டும் நிரூபித்துக் காட்டினார்கள். குற்றவாளிகள் 5 பேரையும் மாலை மரியாதையுடன் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். மேடையில் அமரவைத்து குஜ்ஜார் சாதியின் மானத்தைக் காப்பாற்றிய அந்த மறவர்களின் வீரத்தைப் போற்றினார்கள். கன்னையா லால் என்ற பாரதிய ஜனதா எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். மானம் காத்த மறவர்களைப் பாராட்டுவதில் பாரதிய ஜனதாவுடன் காங்கிரசு போட்டிப் போட்டது.

"விபச்சாரி பன்வாரியை உயிருடன் கொளுத்துவோம்" என்று ஒரு கும்பல் அவளது வீட்டைச் சூழ்ந்து கொண்டு கலகம் செய்தது. ஆனால் இதற்கெல்லாம் பன்வாரி பணிந்து விடவில்லை. உயர்நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்திருக்கிறாள். பெண்ணுரிமை இயக்கங்கள் பன்வாரி தேவிக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கியுள்ளன.

இருந்தாலும் இவ்வளவு மோசமான தீர்ப்பை பன்வாரி எதிர்பார்க்க வில்லை. "நானே வெற்றி பெற முடியாதபோது என்னைப் போன்ற மற்ற பெண்களுக்கு நான் எப்படி நம்பிக்கையூட்ட முடியும்?" என்று திகைத்து நிற்கிறாள் பன்வாரி.

★★

திகைத்துத்தான் போனார் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி. தணிக்கை விதிகள் தெளிவாகத் தடை செய்திருந்தபோதிலும் ஒரு பெண்ணின் முன்புற அம்மணமும், ஆணின் பின்புற அம்மணமும் திரையில் அனுமதிக்கப்படுவதை அவரால் ஏற்க முடியவில்லை.



பூலன் தேவியைக் கொன்று விட்டால் மல்லா சாதியினரின் ஓட்டுக்களை இழக்க நேரிடும் என்பதால் சரணடைவுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அர்ஜுன் சிங் முன் சரணடையும் பூலன் தேவி



படிப்பகம்

www.padippakam.com

**பேண்டிட் குயின் திரைப்படத்தை வெளியிட்ட இந்தி நடிகர் அமிதாப்பச்சனின் பங்களாவுக்கு எதிரில், படத்தை எதிர்த்து பாரதிய ஜனதா பெண்கள் ஆர்ப்பாட்டம்.**



எனவே படத்தைத் தடை செய்து அன்று உத்தரவு பிறப்பித்து விட்டார். சுமார் 3 வாரங்கள் ஓடியபின் படம் தடை செய்யப்பட்டு விட்டது.

ஏற்கெனவே தணிக்கைக் குழுவின் அனுமதி கிடைக்காமல் மேல்முறையீட்டு நடுவர் மன்றத்திற்குச் சென்று அங்கேதான் இப்படத்திற்கு அனுமதி பெறப் பட்டுள்ளது.

'பூலன்தேவியின் உண்மைக் கதை' என்ற அறிவிப்பு, மனுநீதிக்கெதிரான வசனம், தாகூர் சாதிக்கெதிராக பூலன் தேவி பயன்படுத்தும் சில வசைச் சொற்கள் போன்ற சில காட்சிகளை நீக்கியதன் மூலம் படத்தைப் போதுமான அளவு 'சுத்தம்' செய்து விட்டது நடுவர் மன்றம்.

ஆனால் டெல்லி உயர்நீதி மன்றத்திற்கு அது போதுமானதாக இல்லை. பாரம்பரியமிக்க இந்திய ஆணாதிக்கத்தின் அருவருக்கத்தக்க பின்புறமும், சாதி ஆதிக்கப் பெருமிதத்தின் அசிங்கமான முன்புறமும் அம்மணமாக்கப்படுவதை நீதிபதியால் சீரணிக்க முடியவில்லை.

இருப்பினும் திரையரங்கத்தில் இக்காட்சிகள் இடம் பெறும்போது, வக்கிரம் பிடித்த பொறுக்கிகள் ஓரிருவரின் ஊளைச் சத்தத்தைத் தவிர, அரங்கம் அமைதியில் தான் இறுகியிருக்கிறது.

நீதிமன்றத்தின் காதுகளுக்கோ விதிவிலக்கான அந்த ஊளைச்சத்தம் மட்டுமே கேட்டிருக்கிறது. வெள்ளித்திரையில் ஆடையுடனும் ரசிகனின் விழித்திரையில் அம்மணமாகவும் தோற்றம் பெறும் காட்சிகளை, அரங்கம் முழுவதையும் 'புரிந்து கொண்டு' ஊளையிட வைக்கும் காட்சிகளை மட்டுமே தணிக்கை விதிகள் அனுமதிக்கின்றன.

அதிர்ச்சியில் உறைய வைக்கும் அம்மணம் ஆபாசமானது; கிளர்ச்சியில் ஊளையிட வைக்கும் அம்மணம் இந்தியப் பண்பாட்டிற்கு உகந்தது!

தன்னைக் 'கற்பழித்த' காலியிடம், வாழ்நாள் முழுவதும் தன்னைக் கற்பழிக்கும் உரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு (தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு) மன்றாடும் சினிமாக் கண்ணகிகளால் 'பாரதப் பண்பாடு' அம்மணமாக்கப்படுவது நீதிபதிகளுக்கு உறைக்கவில்லை.

ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் என்னும் ஹாலிவுட் திரைப்படத்தில் யூத ஆண்களும் பெண்களும் அம்மணமாக ஹிட்லரின் விஷவாயுக் கூடத்திற்குக் கொண்டு செல்லப்படும் காட்சி இந்தியாவில் தணிக்கை செய்யப்படாத போது பேண்டிட் குயின் படத்திற்கு மட்டும் தணிக்கை ஏன் என்ற கேள்வி நீதிபதியிடம் எழுப்பப்பட்டது.

''அது அனுமதிக்கப்பட்டதால் இதையும் அனுமதிக்கத் தேவையில்லை. மேலும் எது ஆபாசம் என்று தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு சமூகமும் தனக்கேயுரிய அளவு கோலைக் கொண்டிருக்கிறது'' என்றார் நீதிபதி.

பொருள் செறிந்த வார்த்தைகள்! அரசியலுக்கு அமெரிக்க அளவுகோலையும், பொருளாதாரத்திற்கு உலக வர்த்தகக் கழக அளவுகோலையும் பயன்படுத்தும் இந்தியச் சமூகம் கலாச்சாரத்திற்கு மட்டும் 'சுதேசி' அளவுகோலைப் பயன்படுத்துகிறது!

> **''பாரம்பரியமிக்க இந்திய ஆணாதிக்கத்தின் அருவருக்கத்தக்க பின்புறமும், சாதி ஆதிக்கப் பெருமிதத்தின் அசிங்கமான முன்புறமும் அம்மணமாக்கப்படுவதை நீதிபதியால் சீரணிக்க முடியவில்லை''**

பன்வாரி தேவியின் வழக்கைத் தள்ளுபடி செய்த செசன்சு நீதிபதியும் அதே சுதேசி அளவுகோலைத்தான் பயன்படுத்தினார். ''மேல்சாதிக்காரர்களும் ஒரு பார்ப்பனரும் கற்பழிப்புக் குற்றம் செய்யவே முடியாது, இந்த வழக்கே இந்தியக் கலாச்சாரத்திற்கு எதிரானது'' என்றார் அந்த செசன்சு நீதிபதி. நிஜத்தைத் தண்டிக்க விரும்பாத நீதிமன்றம் நிழலைத் தணிக்கை செய்துவிட்டது. இனி நிஜம் பயமின்றி வெறியாடலாம்.

குறிப்பு: இக்கட்டுரை எழுதப்பட்டபோது படத்தின் மீதான தடை அமலில் இருந்தது. பூலன் தேவி இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகி விட்டார்.

ஆனால் பூலான் தேவியைத் தோற்கடிக்க பாரதிய ஜனதா கையாண்ட பிரச்சார உத்தி என்ன தெரியுமா? பெஹ்மாய் கிராமத்தில் கொல்லப்பட்ட தாகூர்சாதியினரின் மனைவிமார்களைத் திரட்டி 'விதவைகள் ரதம்' ஒன்றை விடுவதற்கு முயன்றது பாரதிய ஜனதா.

பாரதிய ஜனதா இவ்வாறு பேசத் தொடங்கிய பிறகுதான், இதுநாள் வரை வெளியுலகிற்குத் தெரியாத இன்னொரு உண்மை வெளிவந்தது. பெஹ்மாய் சம்பவம் நடந்த 3 ஆண்டுகளுக்குப்பின், அதற்குப் பழிவாங்குவதற்காக ஸ்ரீராமின் கும்பல் அஸ்தா எனும் கிராமத்தைச் சேர்ந்த மல்லா சாதியினர் 13 பேரை சுட்டுக்கொன்றது. கிராமத்திற்கே தீயும் வைத்தது.

பூலன் தேவியால் தாகூர்கள் கொல்லப்பட்டதை நாடுமுழுவதும் பரபரப்புச் செய்தியாக்கிய பத்திரிகைகள் இந்தக் கொலைக்கு முக்கியத்துவம் தராததில் வியப்பில்லை. ஆனால் தாகூர் விதவைகளின் ரதத்திற்கு எதிராக மல்லா விதவைகளின் ரதம் வரும் என்று தெரிந்ததால் பிறகு அடக்கி வாசிக்கத் தொடங்கியது பாரதிய ஜனதா.

படத்தின் மீதான தடை நீக்கப்பட்டு விட்ட போதும், பூலன் தேவி பாராளுமன்ற உறுப்பினராகி விட்டபோதும், சாதி ஆதிக்கமும், ஆணாதிக்கமும் கோலோச்சும் சம்பல் பள்ளதாக்கு இன்னும் வறண்டுதான் கிடக்கிறது.

★ சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

## அரசு வருவாய்க்காக பெருகி வரும்

# சூதாட்டங்கள்

''எரிதழல் கொண்டுவா, சூதில் திரௌபதியை வைத்திழந்தவன் கைகளைச் சுட்டெரிப்போம்!'' என்று பாடினான் பாரதி. திரௌபதியை இந்திய நாட்டுக்கு ஒப்புமை சொல்லி பாஞ்சாலி சபதம் பாடிய போது - மனைவியை, ஒரு பெண்ணை, வைத்திழக்கும் கயவர்களைச் சாடினான்.

இதுவன்றி, சூதினை நேரடியாகத் தாக்கினார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வள்ளுவர். ''உருளாயம் ஓயாது கூறின் பொருளாயம் போஒய்ப்புறமே படும்'' (ஒருவன் உருளுகின்ற கருவியால் வரும் பொருளை இடைவிடாமல் கூறிச் சூதாடினால், பொருள் வருவாய் அவனை விட்டு நீங்கிப் பகைவரிடத்தே சேரும்.)

இன்றோ சுரண்டிப் பார்த்து உடனடி லட்சாதிபதியாகும் சூதாட்டத்தை லாட்டரி மூலம் நடத்துகிறார்கள் முதலாளிகள். அதற்கு அரசு முழு ஆதரவு. ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் கிழித்துப் போட்ட குப்பைகளாகச் சோர்ந்து நடக்கும் மனிதர்களின் காலின் கீழே லாட்டரிக்குப்பை. லாட்டரி மட்டுமா? குதிரைப் பந்தயமே சூது அல்ல என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து மறுபடி ரேஸ் தொடங்கி விட்டது தமிழகத்தில்.

நீதிபதி குல்தீப்சிங் சூது பற்றிய புதுவிளக்கத்தை நீட்டுகிறார். ''முற்றிலும் அதிருஷ்டத்தை மட்டுமே முன்வைத்ததல்ல குதிரைப் பந்தயம். குதிரையின் நிலைமை, வேகம், ஓட்டத்தைத் தாக்குப்பிடிக்கும் திறமை, ஓட்டுநரின் லாவகம் எல்லாவற்றையும் சார்ந்து இருப்பதால் அது சூது இல்லை'' சட்டத்தின் வாய் எப்படி வேண்டுமானாலும் மாறிப் பேசுகிறது..

அன்று பகடைக்காய்ச் சூது; இன்று கேசினோ என்ற பகட்டான படாடோபமான, சர்வதேச வலைப் பின்னல் கொண்ட சூதாட்டக் கிடங்கு. அன்று பொழுது போக்குக்கும் தொடர்புக்கும் ஒரு மையம் சூதாட்ட அரங்கம்; இன்று அவை மட்டுமின்றி வரிகளாக அரசு வருவாய்க்கு வற்றாத ஊற்று. முன்பு ஆண்டவர்கள் தங்களை ஆளுகின்ற பரம்பரை என்று கூறி 'தங்களுக்கேற்ற' ஆளும் இலக்கணங்களை வகுத்துப் பின்பற்றினார்கள்.

இன்று ஆளுகின்ற வர்க்கம் தாங்கள் ஆளத் தகுதியில்லை என்று வெளிப்படையாக அறிவிக்கின்ற அறிவுப்புத்தான் 'வரிக்காகவே சூதை அனுமதிக்கிறோம்' என்பது; ஒரு நாட்டில் மட்டுமல்ல, சர்வதேச அளவில் எல்லா நாடுகளிலுமே இவ்வாறு அறிவித்து விட்டார்கள்.

கேசினோச் சூது, லாட்டரிச் சூது, இரண்டிலும் சர்வதேச அளவில் தாராளமயமாக்கி முதலாளித்துவம் 'முன்னேறி விட்டது' என்பதை விரிவாகப் பார்த்தால் விளங்கி விடும்.

மணிலாவில் உலகிலேயே மிகப்பெரிய கேசினோவைக் கட்டப் போவதாக அறிவித்துள்ளது, பிப்பைன்ஸ் அரசு. தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான உருகுவே அமெரிக்க தேசங்கடந்த தொழில் கழகமான இல்டனை வைத்து கேசினோ கட்டப் போகிறது. சவோனிகா என்ற இடத்தில் கிரீஸ் ஐரோப்பாவின் முதல் கேசினோவை அமெரிக்க மாடலில் கட்டப் போகிறது.

அமெரிக்காவின் லாஸ்வேகாஸில் எம்.ஜி.எம். பிரும்மாண்டமான கேசினோ கட்டப் போகிறது. அதை விஞ்சப் போகின்ற மற்றொரு லாஸ் வேகாஸ் எதிர் காலத்தில் வரவே முடியாது என்று இப்போதே பீற்றுகிறது. அங்கிருந்து கடன் வாங்கிக் கனவுகள் காண்கிறது கிரீஸ்.

இதே அமெரிக்கக் கனவுகள் இந்தியாவின் தாராளமயமாக்கும் கொள்கையால் சமீபத்தில் ஏராளமாக நுழைந்திருக்கின்றன. கல்கத்தாவில் அமெரிக்க வார்னர் பிரதர்ஸ் கம்பெனி காசினோ கட்டுகிறது. பம்பாயில் அமிதாப்பச்சன் கார்ப்பரேஷன் அந்நிய உதவியுடன் காசினோ திட்டம் தீட்டுகிறது. சுற்றுலா வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் விபச்சாரத்தை வளர்த்து மேற்கத்திய எய்ட்ஸ் கலாச்சாரம் பரவ ஏற்பாடு செய்து கோவாவில் காசினோக்களை வளர்த்திருக்கிறது இந்திய அரசு. சென்னையில் வீடியோ விளையாட்டரங்கம் 'எம்.ஜி.எம்' என்ற பெயரில் மிகப் பெரிய சூதாட்ட அரங்கமாக முளை விட்டிருக்கிறது.

சீனா - உலகின் இரண்டாவது சோசலிசப் பூமி. அதைக் கழுத்து நெறித்துக் கொன்ற சீன முதலாளிகள் சோசலிசக் கலாசாரத்தையும் நெறித்துக் கொன்று விட்டார்கள். அபின் குழாய்களை உறிஞ்சிக் கொண்டும், பகடை உருட்டிச் சூதாடிக் கொண்டும் நொறுங்கிக் கொண்டிருந்த ஒரு பஞ்சைப்பராரிச் சீனாவை அதிலிருந்து வெளியே இழுத்து முதுகெலும்பு நிமிரச் செய்தது சீனப்புரட்சி.

இன்று ஹைனான் என்ற தென் பிராந்தியத்தில் மாபெரும் கேசினோ விடுதியைத் திறக்கிறது சீனா. இதுதவிர பிரெஞ்சு நாட்டின் விளையாட்டு வியாபாரியான இண்டர்நேஷனல் தே ழி வு என்ற கம்பெனிக் கூட்டோடு சுரண்டிப் பார்க்கும் லாட்டரி தொடங்கியிருக்கிறது. நூற்றாண்டு முடிவில் மக்காவும், ஹாங்காங்கும் விடுவிக்கப்பெற்ற பகுதிகளாக மறுபடி சீனாவோடு சேரப் போகின்றன. அவ்வாறு சேரும் போது சீன வரைபடத்தில் ஹாங்காங்கின் ஆடம்பரக் கேளிக்கை நாறும் கிளப்பான 'ராயல் ஹாங்காங் ஜாக்கிங்' கிளப்பும் சேர்ந்து விடும். ராயல் கிளப் வருவதற்குள் அதற்கு ஏற்ப சூதாட்ட சூழ்நிலைச் சூட்டை உருவாக்கிவிட சீன முதலாளிகள் துடிக்கின்றார்கள்.

### அரசு வருமானம் : வரிகள் தேவையில்லை! கோடிகளைக் கொட்டும் சூதாட்டம்

| உலக லாட்டரி விற்பனை | | கண்டங்கள் வாரியாக லாட்டரி விற்பனை | | அமெரிக்க சூதாட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | தொகை (கோடி ரூபாயில்) | கண்டம் | தொகை (கோடி ரூபாயில்) | சூது வகை | வருமானம் (கோடி ரூபாயில்) |
| 1990 | 1759 | வடஅமெரிக்கா | 1,176 | கேசினோ | 5,470 |
| 1991 | 2,625 | ஆசியா | 413 | லாட்டரி | 987 |
| 1992 | 2,730 | ஆஸ்திரேலியா, நியுசிலாந்து | 84 | குதிரைப் பந்தயம் | 508 |
| 1993 | 2,975 | ஆப்பிரிக்கா | 14 | மக்கள் நல சூதாட்டம் | 252 |
| 1994 | 3,360 | ஐரோப்பா | 1,547 | வீடியோ லாட்டரி | 186 |
| 1995 | 3,570 | | | வேட்டைநாய் பந்தயம் | 102 |



படிப்பகம்

www.padippakam.com

சீனாவை தற்போது ஆள்கின்றவர்க ளில் ஒரு பிரிவுக்கு உள்ளூர அச்ச முண்டு. அதுதான் ரசிய உதாரணம். ரசியாவில் முதலாளித்துவம் மீட்கப்பட்ட பிறகு 264 கேசினோக்கள் தோன்றிவிட் டன. தவிர, வாரம் ஒன்றுக்கு 5 புதிய கேசினோக்கள் என்ற வீதத்தில் 'வளர்ச் சி' திடீரென அதிகரித்துமிருக்கிறது. இவற்றிலிருந்து 90% வரி திரட்டுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த வளர்ச்சி வேகம், அதிகபட்ச வரிவசூல் இடமாகச் சூதாட்டக் கிடங்குகள் மாறி வருகின்றன என்பதையே காட்டுகிறது. தவிர இக்கிடங்குகள் பன்னாட்டு, தேசங் கடந்த தொழில் கழகங்களின் உதவி யோடு திறக்கப்படுகின்றன.

உலகளாவிய வியாபாரம் நல்லது தானே என்று ஆரம்பத்தில் சொல்லப்பட் டது; ஆனால் விரைவிலேயே உலகளா விய சர்வதேச போலீஸ் படை அமைத்து பல கிரிமினல் கும்பல்களை ரசியாவில் வேட்டையாடித் தேடவேண்டிய நெருக் கடி வந்துவிட்டது. ஏனென்றால், சூதாட்ட கேசினோக்கள் அனைத்துமே மஃபியா கும்பல்களின் பணச் சுழற்சிக் கான இடமாக இருக்கின்றன. இதைப் பார்த்து சீனா பயப்படுகிறது. முற்றிலும் 'சுதந்திரமான' முதலாளிகளின் நாடாகச் சீனாவை மாற்ற விரும்பும் சீனமுதலாளி கள் அதைப்பற்றி அச்சப்படவில்லை. அரசு முதலாளித்துவத்தை ஆட்சியில் வைக்க விரும்பும் கும்பல் மட்டுமே அச் சப்படுகிறது.

தைவான் மற்றொரு மோசமான உதாரணம். பூதாகரமான கிரிமினல் கும் பல்கள் தைவானில் ஒரு வருசத்துக்கு 2000 கோடி வரையில் சட்ட விரோதமா கக் கொள்ளையடிக்கின்றன. லாட்டரி முடிவுகள் சங்கேத மொழியில் ரகசிய மாக அறிவிக்கப்படுகின்றன. உள்ளூர் டி.வியில் மீன் சந்தை நிலவரம் அறிவிக் கப்படும்போது மீன் விலை அறிவிக்கப்ப டும். "கோல்டு ஃபிஷ் விலை 24 டாலர், புளோ ஃபிஷ் 38 டாலர், எலக்டிரிக் ஈல் விலை 1 டாலர்..." என்று அறிவிப்பு வரும். வெற்றி பெற்ற லாட்டரி எண் '24381' என்று பொருள். இதைத் தடுக்க முடியாத தைவான் அரசு சட்ட பூர்வமா கக் விட்டது. சட்டவிரோதமான கிரிமி னல் கும்பல்கள் - அவையும் தொடர்கின் றன.


தென் ஆப்பிரிக்கா: நெல்சன் மாண் டெலா ஆட்சிக்கு வந்த போது 1200 சட்ட விரோதமான கேசினோக்களும் 40,000 வீடியோ கேம் சூதாட்ட கிளப்புகளும் நாடெங்கும் மொய்த்துக் கிடந்தன. நெல் சன் மாண்டெலா இவற்றை ஒழிப்பதற் குப் பதிலாக தேசீய லாட்டரி கொண்டு வந்தார். 40 கேசினோக்கள் மற்றும் சட்ட பூர்வ கிளப்புகளைத் திறந்தார். சூதாட் டத்தை அரசே ஆடினால் தவறல்ல என் பது தான் மாண்டெலாவின் வாதம் போலும்.

மலேசியாவில் உலகின் மிகப் பெரிய சூதாட்ட விடுதியை நடத்தி வரும் 'லிம்'



ஒழுக்கம் - அதற்கு காலத்துக்கு காலம் மட்டுமல்ல ஒரே காலத்தில் ஒரே நாட்டில் கூட வேறு வேறு பொருள் உண்டு. இசுலாம் ஒழுக்கம் சிதையாத நாடு என்று விளம்பரம் படுத்தப்படும் மலேசியாவின் மிகப்பெரிய தலைநகர மான கோலாலம்பூருக்கு வடக்கே ஒரு மலை உச்சியில் தொற்றி நிற்கிறது ஒரு கேசினோ, அங்குகூட இசுலாமிய 'ஒழுக் கம்' கடைப்பிடிக்கப்படுகிறது. குடி கிடை யாது. வரவேற்க 'அழகிகள்' கிடையாது. இவையிரண்டும் இல்லாதபரிசுத்தப்படுத் தப்பட்ட சூதாட்டம் மட்டும் உண்டு.

இதை நடத்துபவன் லிம் கோ - தொங் என்ற சீன வந்தேறி. இவனுக்கு மட்டும் சிறப்புச் சலுகை, பெரிய சலுகை. சூதாட்டத்தில் ஒரே ஒரு நபர் ஏகபோக ஆதிக்கம் லீம்-முக்குச் சூட்டப்பட்டது. இன்னொரு வரம்பும் உண்டு. உள்ளூர் முசுலீம்கள் சூதாடக்கூடாது. இது கூடப் பெயரளவிலானதென்கிறார்கள் - அந்நி யர் ஆடலாம்;



அங்கிங்கெனாதபடி எங்கும் துருக்கி - இஸ்தான் புல் நகரில் நடைபாதை லாட்டரி வியாபாரம்

முசுலீம் 'ஒழுக்கம்' சட்டக்கட்டுப் பாடு சாதித்ததெல்லாம் வெளிப்படை யான கிடங்குகளை ரகசியமாக ஆக்கிய துதான். இப்போது மலேசியாவை மைய மாக வைத்து லிம் - வியட்நாம், சீனா பிலிப்பைன்ஸ், தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா என்று தனது குடும்ப மூலத னத்தை விரிவாக்கிக் கொண்டிருக்கின் றான்.

ஏழை நாடுகளில், முதலாளித்துவ நாடுகளில் இந்த நிலைமை என்றால், உல கில் உச்சாணிக் கொம்பில் ஆட்சி புரிவ தாக அலட்டிக் கொள்ளும் ஏகாதிபத்தி யங்களின் நிலை என்ன? பிரிட்டனிலும் 1994-ல் லாட்டரி நுழைந்திருக்கிறது. இளைஞர்களில் 3 பேரில் 2 பேர் லாட்டரி மோகத்தில் ஊறுகிறார்கள். ரொட்டிக் கும், படிக்கிற புத்தகத்திற்கும் செலவு செய்வதைக் காட்டிலும் அதிகமாக லாட் டரிக்குச் செலவழிக்கிறார்கள்.

ஒற்றைத் துருவ உலக ஆதிக்கத்தில் கொடி கட்டிப் பறக்கும் அமெரிக்காவில் என்ன நிலைமை? ஹாலிவுட்சினிமா, பேஸ்பால் - இரண்டும் அமெரிக்காவின் துடிப்பு என்பார்கள். இவை பெரிய வியா பாரங்கள். இதைவிட லாபம் தரும் வியா பாரமாகச் சூதாட்டம் நடக்கிறது.

கேசினோக்கள் போல மிக விரி வாக மக்களை ஈடுபடுத்துகின்ற லாட்டரி களையும், நவீன முறையிலான வீடியோ இணைப்பக (VLT) லாட்டரியையும் சர்வ தேச அளவிலான நவீன சூதாட்டம் என லாம். இதற்கு மூலதனம் குறைவு, அல் லது இல்லவே இல்லை என்று கூடச் சொல்லலாம். தற்போதைய வி.எல்.டி. அமெரிக்காவின் எல்லா லாண்டரிகளி லும், லாரி நிறுத்தங்களிலும் வைக்கப்படு கின்றன. இது ஊட்டுகின்ற வெறி, கொள்ளை, தாங்க முடியாமல் மக்களே கனடாவிலும், அமெரிக்காவிலும், கிளர்ச்சி செய்து அக்கடைகளை அடித்து, நொறுக்கிக் கலகம் செய்து எதிர்ப்பு தெரி வித்திருக்கிறார்கள்.

சாதாரணமாக, சூதாட்ட கிளப்புக ளில் உலகெங்கும் ஆண்கள் தான் இறங் குகிறார்கள். வி.எல்.டி வந்த பிறகு பெண் கள் கூட வீட்டுச் செலவுக்கென வைத்தி ருக்கும் காசை எடுத்துச் சூதாடி விடுகி றார்கள். இளைஞர்கள் 13,14 வயதி லேயே தங்கள் ஓய்வு நேரங்களை மட்டு மல்லாது, பள்ளி நேரங்களையும் வி.எல். டியில் செலவிட்டுச் சூதாடத் தொடங்குகி றார்கள்.

தகவல் உலகப்புரட்சி நடப்பதாகப் பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவில் உள் நாட்டுச் சட்டம் இடம் தராததால், இன்டர் நெட் மூலம் சூதாடுவதை ஆசியா, ஐரோப்பா, லத்தீன், அமெரிக்க நாடுக ளில் செய்கின்றன தேசங்கடந்த தொழிற்க ழகங்கள். இனி சிறுவர்கள் சூதாடத் தொடங்குவார்கள். கள்ளப்பணம் தலை

படிப்பகம்

www.padippakam.com



'மாட்சிமை தாங்கிய' பிரிட்டிஷ் அரசின் லாட்டரிக் குலுக்கல்

விரித்தாடும், பண மோசடி பெருகும். யாரும் ஒன்றும் செய்ய முடியாது.

எனவே, இத்தனை எதிர்கால அபாயங்களையும் ஏமாந்தவன் தலையில் ஏற்றிவிட்டு அதிலும் கொள்ளையடிக்கப் பார்க்கிறது அமெரிக்கா. காரணம் - உள்நாட்டில் கிளம்புகின்ற எதிர்ப்பு. அதை எப்படியாவது மடக்கிவிடுவதற்கும், திட்டங்கள் வைத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக மிஸ்ஸிஸிபியில் ஆற்றங்கரை ஓரமாகப் படகுகளில் மட்டுமே சூதாடலாம் என்று ஒரு சட்டம் உள்ளது. உள்ளூர் பொது மக்கள் அதில் ஈடுபட்டு விடக்கூடாதே என்ற தார்மீக ஆவேசத்தில் அப்படிச் சட்டம் போட்டதாகச் சொல்லிக் கொண்டது. சூதாட்டக் கம்பெனிகளோ, தண்ணீர் நிரம்பிய கால்வாய்களைக் கூட, 'ஆறு' என்று சொல்லி வாதாடி அங்கெல்லாம் 'படகு கிளப்புகள்' தொடங்கிவிட்டது.

கேசினோ எதிர்ப்பாளர்கள் அதன் மீது பன்முகவரி விதிப்பு வேண்டுமென்றார்கள். இந்த எதிர்ப்புகள் கண்டு தேசங் கடந்த தொழில் கழகங்களான எம்.ஜி.எம் கிராண்ட், .ஹில்டன் - இரண்டும் உள்நாட்டை விட உருகுவே, கீரிஸ் மற்றும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளைக் குறி வைத்துள்ளன. தவிர, நியூசிலாந்து, ஆஸ்திரேலியாவில் வேறு பல அமெரிக்கக் கூட்டுக் கம்பெனிகள் திறக்கப்பட்டுள்ளன. திருடனை கேசினோவில் மடக்கிப் பிடிப்பதாக அரசு சொல்கிறது; ஆனால் அமெரிக்காவின் பிரசித்தமான முக்கியச் சந்தையான 'வால்' தெருவிலேயே அவன் மறைந்து விளையாடிக் கொண்டிருக்கிறான்.

இந்தியாவில் நடந்த பங்குச்சந்தை பேர ஊழல் பற்றி நமக்கெல்லாம் தெரியும். இதைவிட பல ஆயிரம் பங்கு பெரிதான சந்தை அமெரிக்காவில் நடக்கிறது. அங்குள்ள நிலைமை சொல்லி மாளாது. அமெரிக்கப் பொருளாதாரத்தோடு கொஞ்சமும் சம்பந்தமில்லாதபடி எந்தத் தொடர்பும் இல்லாமல் நிதிச் சந்தைகள் சுயேச்சையான இலக்கோடு நோக்கங்களோடு இயங்குகின்றன.

இச் சந்தைகளில் நடக்கும் துணைப் பந்தயங்கள் என்ற மிகப் பெரிய பிரம்மாண்டமான மோசடி அமைப்பு பழைய முறையில் கூன் விழுந்த கிழடுகளால் நடத்தப்படுவதில்லை. பெரிய கம்பெனிகளின் முதலாளிகளே கூட அறிய முடியாதபடி கம்ப்யூட்டர் அறிவாளிகளால் அவை இயக்கப்படுகின்றன. அங்கே ஒரு கட்டத்துக்கு மேல் என்ன நடக்கிறது என்று ஊகித்தறிய முடியாமல் இருப்பதால் அந்தச் சந்தைகளை 'கேசினோ'க்கள் என்றே அமெரிக்கர்கள் அழைக்கிறார்கள். இங்கு நடக்கும் பண நிதிச் சூதாட்டத்தை ஒழுங்கு படுத்த தனி கமிஷன் போடவேண்டும் என்று அபத்தத்தின் எல்லை வரை வேண்டுகோள்கள் சென்றுவிட்டன.

எனவே, சூது - அதற்கேயான கிடங்கு தவிர, அமெரிக்காவின் எல்லா இடங்களிலும் எல்லாத் துறைகளிலுமே பரவலாக நடக்கிறது.

சுருக்கமாக, அனேகமாக உலகின் எல்லா நாடுகளிலும் மூலதனத்தை வைத்துப் பகடை உருட்டுபவர்களின் அரசுகள் சூதாட்ட கேளிக்கைகளை அனுமதித்துவிட்டன. நடைமுறை பூர்வமாக, காரியார்த்தமாக இருப்பதே இந்த யுகம் என்று

''சூது அரசு அதிகாரிகளிடம் ஊழலை வளர்க்கிறது. பண மோசடிக்காரர்களைப் பெருக்குகிறது. திட்டமிட்ட வன்முறையைத் தூண்டி விடுகிறது. ஒரு விதப் போதை ஊட்டி தன் வலையில் விழுந்தவர்களைக் கடனாளியாக்கி விடுகிறது.''

அதற்கொரு தத்துவ விளக்கமும் கொடுக்கின்றன. ஒழுக்கம் கெட்டுப் போனதை அங்கீகரிக்கின்ற 'ஒழுக்கமின்மை' எதனால் வந்தது? சூது சமூகத்தை என்ன செய்யும்?

''சூது அரசு அதிகாரிகளிடம் ஊழலை வளர்க்கிறது. பண மோசடிக்காரர்களைப் பெருக்குகிறது. திட்டமிட்ட வன்முறையைத் தூண்டி விடுகிறது. ஒருவிதப் போதை ஊட்டி தன் வலையில் விழுந்தவர்களைக் கடனாளியாக்கி விடுகிறது'' - இவை உலகச் சமூக ஆய்வாளர்களின் ஒருமித்த கருத்து; மனோதத்துவ அறிஞர்களின் ஆழமான கருத்து.

ஆனால் இவை பற்றி சர்வதேச முதலாளிகள் கவலைப்படுவதில்லை. அவர்கள் கவலைப்பட முடியாது. ஏனென்றால் சூது இன்று அரசுக்கு வற்றாத வரி வருமானம் தரும் தங்க அருவி. அது மட்டுமல்ல, பணம், நிதி, மூலதனம், நிதி மூலதனம் - இவற்றின் உலக அளவிலான பூதாகாரமான வளர்ச்சி துரோகத்தனம், லஞ்ச ஊழல், கொலை பாதகம், சல்லித்தனம் ஆகிய எல்லாம் நிறைந்தது.

முதலாளித்துவ அரசுகள், ஆளும் வர்க்கங்கள் மக்கள் நல் வாழ்வுக்கான அரசுகளாக எப்படி இருக்க முடியும்? ஏழை பாழைகளுக்கு இன்னமும் கூட முன்னேறிய மேலை நாடுகளில் ஏன் சோறு, தருகிறார்கள், என்றொரு கேள்வி எழும். 'அதைக் கூடத் தராதே' என்று வலதுசாரி அமெரிக்க கட்சிகள் கத்துகின்றன. ஒரு பக்கம் வேலை இல்லாத் திண்டாட்டம், வீடு - துணி - சோறு இல்லாமை, இன்னொரு பக்கம் அரசு நிவாரணங்களும் இல்லாமை. செல்வந்த அரசுக்கு ஏன் இந்த நிலைமை?

உலகச் சந்தைக்காகப் பல்வேறு நாடுகளின் முதலாளிகள் கழுத்தறுக்கும் போட்டியில் இருப்பதும், அவர்களின் லாப விகிதம் 50 சதம், 100 சதம், 200 சதம், 300 சதம் என்று ஏறஏற எவ்வித ஈவிரக்கமும் இல்லாமல் ஆளும் வர்க்கங்கள் உலகெங்கும் மக்களை ஓட்டச் சுரண்டி வாழ்வதும்தான் காரணம்.

''முதலாளிகள் தன் சொந்த முக லட்சணத்துக்கொப்ப உலகைத் திருத்தி அமைத்துக் கொள்கிறார்கள்'' என்றார் காரல் மார்க்ஸ். அத்தகைய ஈவிரக்கமற்ற சர்வதேச முதலாளிகளிடம் என்ன ஒழுக்கத்தை, நெறியை எதிர்பார்க்க முடியும்? எனவேதான் மக்கள் நல் வாழ்வுக்கு ஒதுக்குவதைவிட மறுபடி மக்கள் வாழ்வைச் சூதின் மூலம் சூறையாடி அதிலிருந்தே வரிசேர்க்கின்றன அந்த அரசுகள்.

சூதினை சர்வதேச முழுக்க ஒழிக்க சூதாடும் கரங்களைச் சுட்டால் தீராது; சூதினை வாழ்க்கை முறையாகத் திணிக்கும் ஒழுக்கங்கெட்ட சர்வதேச முதலாளித்துவத்தை அழிக்காமல் சூதினை அழிக்க முடியாது.

● இராசவேல்



படிப்பகம்

www.padippakam.com

# அரேபிய அடிமைகளாக ஆசியப் பெண்கள்

## பிறந்த மண்ணிலிருந்து வறுமை துரத்துகிறது புகுந்த நாட்டில் ஷேக்குகள் வதைக்கிறார்கள்

சாரா-பாலபகன் - 15 வயதேயான இளம் பெண் - இல்லை வயது வந்த சிறுமி. வெகுளித்தனமும் சூதுவாதும் அறியாத அவளது முகத்தைக் காணும் மனித இதயம் கொண்ட எவரும் ''இவளா? இவளுக்கா இந்தக் கொடூர மான நிலைமை ஏற்பட வேண்டும்'' என்றே எண்ணுவர்.

ஆம். இன்றைய உலகின் போக்குக ளைப் புரிந்து கொள்ளவும் திறனற்ற அந் தப் பேதைப் பெண்தான் மரண தண் டனை வழங்கப்பட்டு துப்பாக்கிப் படை யின் எதிரே நிறுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். காரணம்: தெற்கு பிலிப் பைன்சில் உள்ள மிண்டனோவா தீவில் பிறந்த அவள் ஒரு சின்ன ஆசைப்பட் டாள்; பட்டினியிலும் வறுமையிலும் வாடிய தன் குடும்பத்தை அவற்றிலிருந்து மீட்க ஆசைப்பட்டாள். அதற்காகத் திரு டவோ, விபச்சாரம் செய்யவோ, போதைப்பொருள் கடத்தவோ - விற் கவோ முனையவில்லை. சொற்ப அளவே எழுதவும் படிக்கவும் தெரிந்த அவள் உழைத்து வாழ விரும்பினாள்; அதற்கு தாய்நாட்டில் வழியில்லை. குடும் பத்தினர் தடுத்தும் கேளாமல் 4000 மைல் களுக்கு அப்பால் உள்ள பாலைவன நக ரான அபுதாபிக்குப் போய் வீட்டு வேலைக்காரியாகச் சேர்ந்தாள்.

அங்குதான் இந்தக் கொடூரம் அவ ளுக்கு நேர்ந்தது. அவளது சின்னச் சின்ன ஆசைகள் நொறுங்கிச் சிதைந்தன. ஒவ் வொரு நாளும் பயங்கர சோதனைகளா கவே வடிந்தன. 17 மாதகால நரக வாழ்க் கைக்கு முடிவு கட்டத் துணிந்த அந்தப் பேதைப்பெண் தனது எஜமானன் கற்ப ழித்த கொடூரத்துக்குப் பழிதீர்க்க அவ னைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட் டாள். அந்தக் ''குற்றத்திற்காகத்தான்'' அவளுக்கு இசுலாமிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

பேராசையினால் அல்ல; வறுமை யில் இருந்து மீளும் கனவுகளோடு அபு தாபிக்கு வந்து இறங்கியவள் சாரா. அங் கிருந்து தொலைதூரத்திலுள்ள பாலைவ னச் சோலை நகராகிய அல்-அயினுக்குத் தரகர்களால் அனுப்பப்பட்டாள். அந்நகர ஷேக் ஜாயித்தின் அரண்மனைக் காவல் அதிகாரியாக இருந்த முகமது பலெளசி என்பவனது வீட்டு வேலையாளாகச் சேர்ந்தாள்.

அந்தக் கிழவனது பாலியல் சீண்டல் களைச் சமாளிப்பதே அவளது அன்றா டப் போராட்டமானது. அவளது கன்னித் தன்மைக்கு ஒரு தங்க நகை விலைபேசி னான் பலெளசி. இசுலாமிய மத நம்பிக் கையுடைய, அது போதிக்கும் நல்லொ ழுக்கமும் பேணும் அவள் அவனது கொடுமைகளைத் தாளாமல் ஒரு நாள் தப்பி ஓடினாள். வேலை வாங்கித் தந்த ஏஜென்டிடமே ஓடித் தஞ்சம் கோரி னாள். ஒரு ஆட்டுக்கொட்டிலில் அடைத்து வைத்திருந்த அவன், மீண்டும் அதே கொடூர பலெளசியிடம் சாராவை ஒப்படைத்தான். மீண்டும் அவளது நரக வாழ்வு துவங்கியது. 1994, மே 22ம் நாள் படுக்கை அறைக்குள் சாராவைத் தள்ளிய பலெளசி, அவளது கழுத்திலே கத்தி வைத்து மிரட்டிக் கொண்டே கற்பழித் தான். அவனிடமிருந்து மீண்ட சாரா தரையில் கிடந்த அதே கத்தியை எடுத்து 33 முறை மாறி மாறி, ஆத்திரம் பொங்கக் குத்திக் கொன்றாள்.

கொடூரமான ஒரு குற்றவாளிக்குத் தகுந்த தண்டனைதான் கொடுத்தாள் என்றே மனித நாகரிகமுள்ள எவரும் கருத வேண்டும். ஆனால் அடிமைக்கா லச் சட்டமல்லவா அங்கே கோலோச்சுகி றது! அராபிய பதூயின் இனக்குழுவின் ''இசுலாமிய நீதி மன்றம்'' மனிதவதை புரிந்து விட்டாள் என்று கூறி அதற்காக ஏழுமாத சிறையும், அழித்தொழிக்கப்ப டவன் குடும்பத்துக்கு ஐம்பதாயிரம் டாலர் இரத்தப்பணமும் தரவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது.

அதே சமயம் கற்பழிப்புக்காக அவள் குடும்பத்திற்கு 33 ஆயிரம் டாலர் ஈடு தரவேண்டும் என்றது.

தாய்நாட்டுச் சிறுமிகளையே வைத்து பாலியல் விடுதிகள் நடத்தி மேலை நாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வெட்கங்கெட்ட அரசு தானே பிலிப்பைன்சில் இருக்கிறது. அதுவே ''சாராவை விடுதலை செய்'' என்று வீதிக்கு வந்து முழக்கமிடும் இசு லாமியப் பெண்களது ஆத்திரத்தைக் கண்ட பின் அசைந்து கொடுத்தது. கற்ப ழிக்கப்பட்டாள் என்று ஏற்கும்போதே தற் காப்புக்காக செய்தது எப்படிக் கொலை யாகும் என்று அபுதாபி அரசுக்கு முறை யீடு செய்தது. அல்-அயின் நகர ஷேக் மறுவிசாரணைக்கு உத்திரவிட்டான். முடிவோ காட்டுமிராண்டித் தனமானதா கவும் அதிர்ச்சியூட்டக்கூடியதாகவுமே அமைந்தது. ''சாரா கற்பழிக்கப்பட்ட தற்கு ஆதாரம் இல்லை; அவள் வேண்டு மென்றே திட்டமிட்டுக் கொலை செய் தாள். ஆகவே, மரண தண்டனைதான்'' என்றனர் இசுலாமிய மன்றத்தார்.

இந்த அநீதிக்கு எதிராக உலகம் முழுவதும் கண்டன அலைகள் எழுந் தன. உலகின் பல நாடுகளிலும் மனித உரிமைகள் மற்றும் மகளிர் அமைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தின. பிலிப்பைன் சின் தலைநகர் மணிலாவில் உள்ள அரபு நாட்டு தூதரகத்தின் முன்பு சாராவை விடு தலை செய்யக்கோரி நாள்தோறும் பேர ணிகள் நடந்தன. ஏற்கனவே இதே மாதிரி யானதொரு வழக்கில் பிலிப்பைன்சு வேலைக்காரப் பெண் ஃப்ளோர் கண்டம் பிளாசின் இரட்டைக் கொலை செய்தாள் என்பதற்கே சிங்கப்பூர் அரசின் மரண தண்டனைக்குப் பலியானாள். அவளைக் காப்பாற்ற முயலாமல், அசிரத்தையாக நடந்து கொண்டதற்காக கடும் கண்டனத் திற்குள்ளாகி இருந்தது பிலிப்பைன்சு. இப்போதும் அப்படி நடக்க முடியாது என்பதால் சாரா வழக்கில் அக்கறைகாட் டத் தலைப்பட்டது. சாராவை மன்னிக் கும்படி அபுதாபி ஷேக்கிடம் மன்றாடி யது.

இப்படிப் பலவாறான எதிர்ப்புக ளின் காரணமாக, அந்த அரபுநாட்டு அதி பர் சாரா வழக்கில் தலையிட்டு இன்ன மும் வெட்கக்கேடான ஒரு ''சமரசம்'' செய்தார். சாராவின் மரணதண்டனை ரத்து செய்யப்படும்; ஆனால் அவளால் கொல்லப்பட்ட அந்த காமுகன் ஃபிலெள சியின் குடும்பத்துக்கு பழங்கால பதூயின் இனக்குழு மரபுப்படி சாரா ''இரத்தப் பணம்'' நட்ட ஈடாக செலுத்த வேண்டும்; அது எவ்வளவு என்று பகிரங்கமாக அறி விக்க மாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

"இரத்தப்பணம்" அது எவ்வளவு தொகையாக வேண்டுமானால் இருக்கட்டுமே. தன்னைக் கற்பழித்த காமுகனை அழித்தொழிப்பதும் குற்றம் என்று முத்திரை குத்துவதுதானே. சாராவுக்கு அல்ல, இது மனிதநாகரிகத்துக்கே ஒரு களங்கம் தானே!

சாரா சாவின் பிடியிலிருந்து உயிர் தப்பிவிட்டாள். ஆனால் இந்தச் சம்பவம் அரேபியத் தீபகற்பத்தில் நிலவும் இருண்ட பக்கத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. முகமது நபி தோன்றிய அதே காலத்து அடிமை முறைதான் இன்னமும் அங்கு நிலவுகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இளம்பெண்கள் பின்தங்கிய ஆசிய நாடுகளில் இருந்து செல்வந்த அரேபியக் குடும்பங்களின் அடிமைகளாக "கடத்தப்"படுகிறார்கள். ஐதராபாத்தில் உள்ள "ரிக்ஷா" தொழிலாளியின் மகள் 14 வயது அமீனாவை 80 வயது ஷேக் மணந்து கொண்டு கடத்திப் போக முயன்றானே அது ஒரு வகை! கை நிறைய சம்பளம், கவர்ச்சிகரமான வேலை என்று கூறி சந்தேகத்துக்குரிய வேலை வாய்ப்புத் தரகன்கள் ஆசை காட்டி "அனுப்பி" வைப்பது இன்னொரு வகை.

அங்கே போனதும் புதுமனைவியாகப் போனவரானாலும், வேலை தேடிப் போனவரானாலும் அடிமைதான். அவர்களது ஊதியத்தில் பெரும்பகுதி விமானப்பயணக் கட்டணத்துக்காகவும், வேலை வாங்கிக் கொடுத்த தரகுத் தொகைக்காகவும் பறித்துக் கொள்ளப்படுகிறது. வேலைக்கான ஒப்பந்தக் காலம் முடிந்தபிறகும் விடுதலை பெற்றுத் தப்பித்து சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாதவாறு அவர்களுடைய கடவுச் சீட்டுகளையும் கைப்பற்றி வைத்துக் கொள்கிறார்கள்.

வாரத்தில் ஏழு நாட்களும் அதிகாலை முதல் நள்ளிரவு வரை உழைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மீந்து போனதையும் எச்சில் உணவையுமே உண்டு உயிர் பிழைத்திருக்கிறார்கள். அடி-உதை, ஏச்சுப் பேச்சு, பாலியல் சித்திரவதை - கற்பழிப்பு படுகொலைகள் ஆகியவை அவர்கள் சந்திக்கும் ஈவிரக்கமற்ற கொடுமைகள். மிகமிக அப்பட்டமான, மறைக்கவே முடியாத விவகாரங்களிலேயே பாலியல் வன்முறைகள் வெளிக்கு வருகின்றன.

இந்த அக்கிரமங்களுக்கு அரசே அனுமதியும் அளித்துள்ளது என்பது தான் விபரீதமே! ஆண்டைகளின் கொடுமை தாங்காமல் பணிப் பெண்கள் தப்பி ஓடுவதும் அரபு நாடுகளின் குடியேற்றச் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும். இருப்பினும் பிலிப்பைன்ஸ், இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் இந்தியத் தூதரகங்களில் ஒவ்வொரு



15 வயது சிறுமி சாரா. இந்தப் பிஞ்சு முகத்தின் கண்களுக்கு இஸ்லாமிய பழமைவாதிகள் பதில் சொல்ல வேண்டும்

நாளும் நூற்றுக்கணக்கானோர் தஞ்சமடைகின்றனர். அரபு ஷேக்குகள், சுல்தான்கள் அளிக்கும் விருந்துகளில் குடித்துக் கும்மாளமிடும் இந்நாடுகளின் தூதரக அதிகாரிகளோ இப்பிரச்சினையை அலட்சியமாகவே அணுகுகின்றனர்.

உலகின் பலநாடுகளும் கூடி, ஈராக்குக்கு எதிராகப் போரிட்டு மீட்ட குவைத் நாடுதான் மிக மோசமான அட்டூழியங்கள் நிறைந்ததாக உள்ளது. குவைத் நகரில்தான் மிக அதிகமான பணிப்பெண்கள் தமது தாய்நாட்டுத் தூதரகங்களில் தஞ்சம் தேடி வருகின்றனர். "இங்குள்ள பலவீடுகளிலும் ஆசியப் பணிப்பெண்களை முறைகேடாக நடத்துவதும், அடித்து உதைப்பதும் கற்பழிப்பதும் உரிமையோடும், ஒரே வழமையாகவும் நிகழ்வதை எங்களது ஆய்வுகளின் போது கண்டோம்" என்று பெய்ஜிங் மகளிர் மாநாட்டின்போது சமர்ப்பித்த மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அறிக்கை குவைத் பற்றிக் கூறுகிறது. இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த பல பணிப்பெண்களின் கண்ணீர்க் கதை தெளிவான சித்திரத்தை தரக்கூடியவையாக உள்ளன.

> "சாரா சாவின் பிடியிலிருந்து உயிர் தப்பிவிட்டாள். ஆனால் இந்தச் சம்பவம் அரேபியத் தீபகற்பத்தில் நிலவும் இருண்ட பக்கத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. முகமது நபி தோன்றிய அதே காலத்து அடிமை முறைதான் இன்னமும் அங்கு நிலவுகிறது"

•பாத்திமா, 21 வயது இசுலாமியப் பெண். இலங்கையின் குருனேகாலாவைச் சேர்ந்தவர். பென்சில், தாள் வைத்து எழுதித்தான் மற்றவருடன் தன் எண்ணத்தைச் சொல்ல முடியும். வேலை வாங்கித் தரும் தரகனால் கற்பழிக்கப்பட்ட அதிர்ச்சியால் அவரது நாக்கு அவளது மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டு பேசும் சக்தியை இழந்தாள், என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவள் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்ததும் வரவழைக்கப்பட்ட போலீசு மருத்துவர் 'அவள் கன்னி கழியாதவள். ஆகவே கற்பழிக்கப்பட்டவள் என்பதை ஏற்கமுடியாது' என்று பொய்யான சான்றிதழ் அளித்தார். குற்றவாளி தப்பியதோடு அந்தப் பெண் மீதே பொய்யான புகார் தந்ததாக பழிபோடப்பட்டது.

மரியம் திருமணமான 25 வயதுப் பெண். இலங்கையில் அவளது கணவனும் ஒரு குழந்தையும் உள்ளனர். இவளோ ஒரு வயதுக் குழந்தையுடன் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தாள். அது அவளது ஆண்டையின் மகனால் கற்பழிக்கப்பட்டு பிறந்த குழந்தை; அவனோ அடியோடு மறுக்கிறான். விசாரணை என்கிற பெயரில் 8 மாதகாலம் மருத்துவமனையில் சிறை வைக்கப்பட்டாள். கற்பழித்தவன் சொன்னதையே குவைத் போலீசு ஏற்றதால் தூதரகத்தின் ஒரு மூலையிலே வாழ்ந்து வருகிறாள். யாராவது போடும் "பிச்சை"யே பிழைப்புக்கு வழியாக உள்ளது. கற்பழிக்கப்பட்டவள் என்பதால் கணவனும் சமூகமும் அவளை ஏற்க மறுத்து அனாதையாக்கப் பட்டாள்.

தூசாரி, 26 வயதுப்பெண். இலங்கை அனுராதபுரத்தைச் சேர்ந்தவள். இவளுக்குப் பாலியல் சித்திரவதைகள் கிடையாதுதான். ஆனால் வேலையில் அதிகாலை முதல் நள்ளிரவு வரை கசக்கிப் பிழிகிறார்கள். வீட்டில் குழந்தைகளைப் பராமரிப்பது முதல் எல்லா வேலைகளையும் செய்து கொண்டு ஆண்டையின் மனைவி நடத்தும் அழகு நிலையத்திலும் வேலை செய்ய வேண்டும். ஆனால் முறைப்படி ஊதியம் தருவதில்லை. சிறு தவறு செய்தால் கூட ஆண்டையின் மனைவி துசாரியின் வயிற்றில் ஓங்கிக் குத்துவாள். இந்தக் கொடுமை தாளாமல் தப்பிவந்து தஞ்சமடைந்த தூசாரி கசப்போடு சொன்னாள், "நான் இலங்கைக்கே திரும்பிப் போக விரும்புகிறேன். இங்கே இருப்பதே வெறுப்பாக உள்ளது. அவர்கள் பணக்காரர்கள்; நாங்களோ பரம ஏழைகள்; அதுதான் எங்



படிப்பகம்

www.padippakam.com

களை பிராணிகளைப் போல நடத்துகிறார்கள்.''

குவைத்தில் இருந்து இந்தக் கொடுரங்கள் வெளிவருகின்றன. இதே அளவு மோசமான நிலை சவுதி அரேபியாவிலும் இருந்தாலும், அந்த அரசு அவற்றை மூடி மறைத்து விடுகிறது. அங்குள்ள 43,000 பிலிப்பைன்ஸ் பணிப்பெண்களில் ஆண்டுதோறும் 4000 பேர் தமது தாய்நாட்டுத் தூதரகத்தில் தஞ்சமடைகின்றனர். அவர்களில் 11 பேர் கற்பழிக்கப்பட்டவர்கள்; இதற்கும் மேலாக கற்பழிப்புச் சம்பவங்கள் இருக்கலாம்; புகார் கொடுத்தால் தானே விசாரிக்க முடியும் என்கிறது தூதரகம்.

''இதெல்லாம் கலாச்சார வேறுபாடுகளால் ஏற்படுவன; பெண்கள் பர்தா அணியும் வழக்கமுள்ள நாடுகளில், அரைகுறை உடையுடன் புழங்கும் பணிப்பெண்கள் ஒழுக்கங்கெட்டவர்களாக எண்ணத் தோன்றுகிறது. செல்வந்தர்களான அரேபியர்கள் கல்வி அறிவில்லாததால் பணிப்பெண்களை அடிமைகளாகவே கருதுகின்றனர்'' என்று குவைத் ஆட்சிக் குழுவின் மனித உரிமை கமிட்டி நியாயம் கற்பிக்கிறது. ''ஏதோ சில சம்பவங்கள் நடக்கின்றன; அவற்றைப் பிரசுரித்துப் பெரிதுபடுத்தும் அளவுக்கு ஒன்றுமில்லை. இதைக் கூட சகித்துக் கொள்ள முடியாவிட்டால் உங்கள் பெண்களை வெளியே ஏன் அனுப்புகிறீர்கள்; பூட்டி வைத்துக் கொள்வதுதானே; இதுவே தொல்லையாகப் போய்விட்டது'' என்று திமிரோடு கேட்கிறார் குவைத் அதிகாரி.

இந்த நிலையில் சாராவை மீட்பதற்கு உலகின் பல்வேறு இயக்கங்களும் மேற்கொண்ட முயற்சியை கசப்போடு, வெறுப்போடு பார்க்கிறார்கள் அரேபியர்கள். ''ஒரு மனிதனைக் கொன்றவளுக்கு ரோஜாப்பூவா தந்து பாராட்ட முடியும். அரேபியர்களும், முஸ்லீம்களும் எப்போதும் சந்தேகத்துக்குரியவர் என்று இழிவாகவே கருதப்படுகிறார்கள். எங்கள் நாட்டில் எங்கள் சொந்தச் சட்டத்தை அமுலாக்கவும் கூடாதா?'' என்று ஆணவத்தோடு எழுதுகிறது ''அல் சுருக்'' என்ற துபாய் செய்தித்தாள்.

அவர்கள் சொந்தச் சட்டத்தின் யோக்கியதை என்ன? ஆயிரக்கணக்கான பணிப்பெண்கள் அங்கே உழைத்தாலும் அவர்கள் சட்டப்படி அங்கே இருப்பவர்கள் அல்ல. அவர்களை அச்சட்டம் மனிதர்களாகவே கருதி அங்கீகரிப்பதில்லை. ஒரு அரபுப் பெண்ணுக்கு மானபங்கம் ஏற்பட்டாலோ, ஒரு அரேபியனின் உயிருக்கு ஆபத்து என்றாலோ மரணதண்டனை தரப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பு ஒரு பணிப்பெண் தனது எஜமானியைத் திருப்பி அடித்தாள் என்பதற்காக வழங்கப்பட்ட தண்டனையோ ஐந்தாண்டு சிறைவாசம். ஆனால் உழைக்க வந்தவள் கற்பழிக்கப்பட்டாலோ, ஆண் கொலை செய்யப்பட்டாலோ, அங்கே சட்டப்படியே குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியும்.

ஜனநாயகப் பண்பும், மனித நேயமும் போற்றும் இசுலாமியர்களிடமும் எம்மதமும் சம்மதம் எனக்கூறும் நெறியாளர்களிடமும் கேட்கிறோம். இதுதான் இசுலாமிய தர்மமா? அடிமைத்தனமும் அராஜக வாழ்வும் நடத்திய அன்றைய அரேபியப் பாலைவன நாடோடிகளான பதூயின் இனக்குடிகளை நாகரிக வாழ்வுக்குத் திருப்பிய முகமது நபி போதித்த தர்மம் இத்தகையது தானா? இதற்காகத் தான் நபிமாரின் வாரிசுகள் அரேபியச் சுடுமணலில் இரத்தம் சிந்தினரா? அந்தத் தியாகத்தை நினைவு கூற மொகரம் என்ற தியாக நாளில் ஆண்டுதோறும் இரத்தச் சின்னங்களை இசுலாமியர் வரைந்து கொள்வது இத்தகைய தர்மநெறியைக் காப்பதற்குத்தானா?

''எங்கே இல்லை இப்படிப்பட்ட கொடுமைகள்! இந்த நாட்டில் மட்டும் என்ன வாழ்கிறது!'' என்று இசுலாமிய மதவாதிகள் கேட்பது புரிகிறது. ஆம்! இங்கேயும் இதேநிலைதான். இராஜஸ்தானில் பண்வாரிதேவி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணைக் கற்பழித்த குற்றவாளிகளுக்கு எதிரான வழக்கில் மேல்சாதிக்காரர்கள் ஒரு கீழ்ச்சாதிப் பெண்ணை தொட்டு அப்படி நடந்திருக்கமாட்டார்கள் என்று விடுதலை செய்தது உயர்நீதி மன்றம். பார்ப்பனிய சனாதன இந்து தர்மத்துக்கு எதிராக எவ்வித சமரசமும் இல்லாமல் போராடி வருபவர்கள் என்ற உரிமையில்தான் இதைக் கேட்கிறோம். ''ஷாரியத்''தானாலும் ''மனுதர்ம''மானாலும் ஒன்று மோசமானது என்பதால் இன்னொன்று நல்லது என்றாகாது. ஏதோ ஒரு பன்வாரிதேவி, ஏதோ ஒரு சாரா விவகாரத்தில் மட்டுமல்ல; கோடிக்கணக்கான சாராக்களும் பன்வாரிதேவிகளும் ''ஷாரியத்''தாலும், ''மனுதர்ம''த்தாலும் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டு வருகிறார்கள்.

★ லிங்கன்



சாராவை விடுதலை செய்! பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் அரபு நாட்டுத் தூதரகம் எதிரில் பெண்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

'ஷாரியத்' தானாலும் 'மனுதர்ம'மானாலும் ஒன்று மோசமானது என்பதால் இன்னொன்று நல்லது என்றாகாது. கோடிக்கணக்கான சாராக்களும், பன்வாரிதேவிகளும் 'ஷாரியத்'தாலும், 'மனுதர்ம'த்தாலும் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டு வருகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# மேற்படி ஆட்கள்

✱ துரை. சண்முகம்

"சார் இந்தாங்க'' காஷியரின் பதிலை எதிர்பார்க்காமல் பணத்தை கவுண்டருக்குள் தள்ளினான் வந்தவன். குனிந்த தலையை நிமிர்த்தாமல் கண்களை மட்டும் மேல்நோக்கி உருட்டி பார்த்துவிட்டு இடது கை பெருவிரலால் பணக்கத்தையை தள்ளிக் கொண்டிருந்தார் காஷியர். கண்ணாடி இடைவெளி வழியே முடிந்த அளவுக்கு பார்வையை துழாவ விட்டவன், பணக்கட்டுகளைப் பார்த்து சலித்த வண்ணம் ''சார், நிப்பாட்டிட்டு கொஞ்சம் இத முடிச்சு அனுப்புங்க '' என்றான் ஏற்ற இறக்கத்துடன். கடைசி நோட்டைத் தள்ளி பொறுமையாய் ரப்பர் பேண்ட் போட்டுவிட்டு, ''கொஞ்சம் வெயிட் பண்ணுங்க'' என்று அடுத்த கட்டை கையில் எடுத்தார்.

''என்ன சார் இவ்வளவு தூரம் கேக்குறேன் நீங்க பாட்டுக்கு உங்க வேலையை பாக்குறீங்க?''

''உங்க அவசரத்துக்காகப் பாதியிலேயே வைக்க முடியாது சார், ஒரு பத்து நிமிஷம் இருங்க முடிச்சிட்டு வாங்கிக்கறேன்.''

''எங்க அவசரத்துக்கு இல்லேன்னா எதுக்குய்யா இங்க அக்கவுண்ட்டு, கஸ்டமர்தான் மொதல்ல மத்ததெல்லாம் பிறகுதான்னு பெரிசா போர்ட மட்டும் மாட்டிட்டீங்க என்னய்யா சிஸ்டம் இது?''

''சார் உங்களுக்குத்தான் கத்த தெரியும்னு கத்தாதீங்க, பேங்குன்னா அப்படிதான் முன்ன பின்னதான் ஆகும். பெரிசா கத்திட்டா வேலை ஆயிடுமா?''

''என்னய்யா கத்துறேன் கத்துறேங்குற. கஸ்டமரு கிட்ட பிகேவ் பண்ண தெரியல, நீ எனக்கு டீசென்சி கத்து தர்றீயா?'' வங்கியில் இருந்த அனைவருமே கவனிக்கும்படி சத்தம் மேலிட்டது.

''என்னய்யா நீ வா போங்குற. பேங்க்ல வேலை செய்யறவன்னா ஒண்ணும் இல்லாதவன்னு நெனப்பா?'' கழுத்து நரம்பு புடைக்க எழுந்து நின்றார் காஷியர், நிலைமையின் விபரீதம் உணர்ந்த மானேஜர் தவித்துப் போய் ஓடி வந்தார். ''கீப் கொய்ட், மொதல்ல சீட்ல ஒக்காருங்க, சார் கோபப்படாதீங்க, இங்க வாங்க. என்ன வேணும் நான் செஞ்சி தாரேன் டோண்ட் ஓரி, அவருக்காக நான் எக்ஸ்கியூஸ் கேட்டுக்கறேன்.''

''இல்ல சார்! நானும் எவ்வளவோ பொறுமையா அப்ரோச் பண்ணியும், அந்த ஆள் 'இன்சல்ட்டிங்கா' நடக்குறார்னா அப்புறம் கஸ்டமருக்கு என்ன சார் மரியாதை'' பார்த்துக் கொண்டிருந்த பலருக்கும் கேட்கும் படி அழுத்தமாகச் சொன்னான் வந்தவன்.

''புரியுது சார், கூல் டவுன், வாங்க நான் செஞ்சு தர்ரேன்'' இதமான வார்த்தைகளாலும் இடைவிடாத புன்னகையாலும் அவரை தனது அறைக்குள் அழைத்துச் சென்றார் மானேஜர்.

''உட்காருங்க என்ன சாப்புடறீங்க, ஹாட் ஆர் கூல்?''

''நோ தாங்க்ஸ். எப்பவும் இப்படி கோபம் வந்ததில்லை, அந்தாளு என்னை டென்சனாக்கிட்டார்.''

''கோவிச்சுக்காதீங்க, அந்தாளு நியூ அப்பாயிண்ட்மெண்ட். யாருகிட்ட எப்படி நடக்கணும்னு தெரியல, தெனம் பிரச்சனதான். என்ன சார் பண்றது. இதெல்லாம் தானா தெரியணும். நீங்க தப்பா எடுக்காதீங்க.

சிறிது யோசிப்புக்குப் பின், ''நீங்க சீனிவாச முதலியார் சன் தானே? மானேஜர் சந்தேகத்தை வெளிப்படுத்த ''ஆமாம் சார் அப்பாவ தெரியுமா?'' என பழைய லெவலுக்கு இறங்கினான் வந்தவன்.

''தெரியுமாவா! நான் இந்த பிராஞ்சுக்கு வர்றதுக்கு முன்ன இருந்தே கஸ்டமர் அவர். இந்த ஊர்ல வி.ஐ.பி. வேற. அவரு கூட உங்கள பாத்த ஞாபகமிருக்கு அதான் கேட்டேன்'' சந்தேகம் தெளிவானவுடன் நெருக்கத்துடன் தொடர்ந்தார்.

''சார் இந்த இன்சிடென்ட்டெல்லாம் போய் அப்பாகிட்ட சொல்லிக்க வேணாம் வருத்தப்படுவாரு'' என்று குரலைத் தாழ்த்த, ''சார் என்னதான் போஸ்டிங்குக்கு வந்தபின்னும் புத்தி மாறுதா, அந்தாளு கோட்டாவுல வந்தவன், எஸ்.ஸி.ங்க. என்னாதான் முன்னேறுனாலும் யாருகிட்ட எப்படி நடக்கணும்னு தானா வருதா பாத்தீங்களா!''

''ஓ! சரிதான். இப்ப சொன்னீங்க பாருங்க. கல்ச்சர் எல்லாருக்கும் வந்துடாது சார். அதது புத்தி இருக்கத்தான் செய்யும். எல்லா டிபார்மெண்ட்லயும் சாதின்னு சொல்லி இப்படி ஆளுங்கள போட்டு அது அதுக்குள்ள தகுதியே போச்சு சார்! பழைய சந்தானத்த எடுத்துக்குங்க. வர்ற ஆளுங்க தராதரம் தெரிஞ்சு பேசுவார்'' ஒத்திசைந்தான்.

பேசிக் கொண்டிருக்கும் போதே நேரே கண்ணாடிக் கதவு வழியே யாரையோ ஹாலில் பார்த்து புரிந்து கொண்டவராய் மானேஜர் எழுந்து கொண்டார்.

''வாங்க, வாங்க, ரொம்ப நாளாவுது ஆளையே பார்த்து. ஊர்லதான் இருக்கீங்களா.''

''என்ன சார் பண்றது நம்ப பொழப்பு அப்படி.''

உட்காரச் சொல்லி நலம் விசாரித்து மேசையிலிருந்த பஸ்ஸரை அழுத்தினார் மானேஜர். பஸ்ஸரின் அழைப்பிற்கிணங்க பியூன் அறைக்குள் வந்தார்.

''ஏ ராமு, நம்ம ஆரியபவன்ல சூடா ஒரு காபி மானேஜருக்குன்னு சொல்லி ஸ்ட்ராங்கா போட்டு வாங்கியா, புரியுதா சீக்கிரம்''.

''சரி சார்'', பியூன் விரைந்தார்.

''அப்புறம். எப்படியிருக்கீங்க. இந்த பக்கத்தையே மறந்திட்டீங்களா''

''அட நீங்க ஒண்ணு சார், எங்க வர வுடுறானுங்க. தேர்தல் வேற வருதா பிரசுக்கு போங்குறான், போஸ்டர் அடிக்க போங்கறான். அவன பாக்கறதும், இவன பாக்கறதும் ஒரே அலச்சல் சார்'' அலுத்துக் கொண்டான்.

உள்ளுக்குள் அணிந்திருந்த வலை பனியனை துல்லியமாக எடுத்துக்காட்டும்படியான தும்பைப் பூ சட்டை. அச்சில் வார்த்த போன்ற ஒப்பனை கலையாத முகம். நறுக்கு தெரித்தாற் போன்ற பேச்சு. அனைத்தையும் ஆர்வமாய் கவனித்துக் கொண்டிருந்தான் முதலியார் பையன்.

மானேஜரிடம் பேசிக் கொண்டே, அவன் வேட்டியை மடித்து கால் சட்டையின் இரு பக்கமுமிருந்து பணக்கட்டுக்களை எடுத்து மேசை மீது பரப்பினான். மானேஜர் புரிந்து கொண்ட விதமாய் ''பணம் போடறதுக் குதானே'' கூடவே புன்னகையை வரவழைத்துக் கொண்டார். ஆவி பறக்க வந்த காபியைத் தந்து உபசரித்தார். ''ஆமாஞ் சார் பாசு புக்கு கணக்குல போட்டுடுங்க. அத வேற எடுத்துட்டு வரல. அலச்சல் ஞாபகமே வர்றதில்லை சார்ச்..'' சலித்துக் கொண்டான்.

''பரவாயில்ல. அக்கவுண்ட் நம்பர் எய்ட் டூ சிக்ஸ் தான, எனக்கு ஞாபகமிருக்கு'' என்றவர் திரும்பவும் பஸ்ஸரை



படிப்பகம்

www.padippakam.com

## நாட்டுப்புறப் பாடல் யாருக்கு?

நாட்டுப்புறப் பாடல் சந்தை சரக்காக மாற்றப்பட்டதன் மூலம் வசதியும் வாழ்க்கையும் தேடிக் கொண்ட பிரபலங்களில் 'புஷ்பவனம் குப்புசாமியும் ஒருவர். இவர் பொள்ளாச்சி மகாலிங்கம் நடத்துகின்ற 'ஓம்சக்தி' (ஜூன்'96) மே மாத இதழில் நீண்ட பேட்டியொன்றை தந்திருக்கிறார். அதில் தான் பிறந்து வளர்ந்த கதை, தற்போது பல வெளிநாடுகளுக்கு கச்சேரி செய்யுமளவுக்கு முன்னேறிய நிலை, தன்னை தமிழர் அமைப்புகள் அழைக்கும் போது - சபாக்கள் அழைக்காதது குறித்த வருத்தம், கூடவே, "நாட்டுப்புற பாட்டு மெட்டிலே கம்யூனிசம், இன்னும் ஜாதி பேரில் இருக்கின்ற பாடல்களையும் பாடி இதை கொச்சைப் படுத்துகிறார்கள், இன்னும் சிலர் சினிமாப் பாடலை நாட்டுப்புறப்பாடல் என்று கொச்சைப் படுத்துகிறார்கள். மக்களும் இவைகளை ஏமாந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்", என்று உள்ளம் கொதிக்கிறார் பு.குப்புசாமி. மக்களைப் பற்றி இதைவிட யாரும் அதிகமாக கவலைப்பட முடியாது.

உழைக்கும் மக்களிடத்தில் உழைக்கும் போக்கில் தோன்றிய நாட்டுப்புறப் பாடல் இன்று உட்கார்ந்து தின்பவர்களுக்கு வேடிக்கைப் பொருளாக மாற்றப்பட்டுவிட்டது. உழும் போது, நாத்து நடும்போது, களைபறிக்கும் போது, அறுவடை செய்யும் போது, துடுப்பு போடும்போது, கல் உடைக்கும் போது உழைப்பாளிகள் பாடினார்கள். களைப்பை மறக்க, வறுமையே இயல்பாகிப் போன வாழ்க்கையை மறக்க, ஆண்டைகளின் கொடுமைகளை பாட்டிலேனும் எதிர்க்க பாடினார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாடினார்கள். வியர்வைத் துளியும், உதிரத் துளியும் கலந்து, வனத்திலும், மலை முகட்டிலும், கடல் அலையிலும், வயல் வெளியிலும், வானத்திலும் எதிரொலிக்கும் அந்தப் பாடலை அம்மக்களின் விடுதலைக்கு புரட்சியாளர்கள் பயன்படுத்துவது குற்றமாம்.

நாட்டுப்புறப்பாடலின் உயிரை எடுத்து விட்டு வெறும் பக்தி, காதல், ரசனை என்று சுருக்கி கொச்சைப்படுத்திய காமாலைக் கண்களுக்கு சாதி ஆதிக்கத்தையும், பண்ணை ஆதிக்கத்தையும் தகர்த்து வரும் புரட்சியாளர்களின் நாட்டுப்புறப் பாட்டு எப்படிக் கேட்கும். 'அவாளின்' சபையில் பாட வாய்ப்பில்லையே என ஏங்கும் பு. குப்புசாமிக்கு, விமானத்தில் பறந்து சிங்கப்பூரில் கச்சேரி செய்து நாட்டுப்புறப் பாடலை வளர்க்கும் இந்தக் கழிசடைக்கு - உழைக்கும் மக்களின் விடுதலைப் பாட்டை சகிக்க முடியாது.

அதனால்தான் ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணிக்கு புரவலராக இருக்கும் பொள்ளாச்சி மகாலிங்கம் புஷ்பவனம் குப்புசாமிக்கும் புரவலராக இருக்கிறார்.

அழுத்த பியூன் வந்தார். "ராமு பே இன்ஸ்லிப் ஒண்ணு கொண்டு வா" பியூன் உடனடியாகக் கொண்டு வர, மானேஜரே கைப்பட அனைத்தையும் பூர்த்தி செய்து இருங்க வந்துடறேன் என்று பணத்தோடு எழுந்து போனார். மானேஜரின் பணிவான சேவையை எண்ணி நெஞ்சார மகிழ்ந்தான் முதலியார் பையன்.

சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பி விட்டார் மானேஜர். பணம் கட்டிய ரசீதை அவ்வலைப் பனியனிடம் ஒப்படைத்து "அடிக்கடி வந்துபோங்க மறந்துடாதீங்க" என்றார் நட்புடன், "தேர்தல் நேரமாச்சுங்களா தலைவர் கையிலயும் பணம் பொரள மாட்டேங்குது. வந்தா அப்படியே செலவாயிடுது. பாரு சார் நான் பாட்டும் உக்காந்து பேச ஆரம்பிச்சுட்டேன், தலைக்கு மேல வேலை இருக்குது வரட்டுங்களா. அப்புறம் பாக்கறேன் சார்" விடுக்கென்று எழுந்தவனை கதவு வரை சென்று வழியனுப்பினார் மானேஜர்.

"உஸ்" என்று பெருமூச்செறிந்து உட்கார்ந்த மானேஜரிடம் ஆர்வமுடன் தொடர்ந்தான் முதலியார் பையன்.

"யார் சார் அது, எதுவும் பிசினெஸ் பண்றாங்களா?"

"அட நீங்க வேற பிசினெசும் இல்ல ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல" என்றவர் குரலை கம்மி பண்ணியவராய் "சுத்த பொறுக்கி பய" என்றார் அவசரமாக.

"என்ன சார் இது?" அதிர்ச்சியுடன் வினவினான் முதலியார் பையன்.

"ஆமாம் சார். ஒரு வருசத்துக்கு முன்னால இந்த ஏரியாவுல கடகாரங்க கிட்ட மாமூல் வாங்கிட்டு இருந்தான். இப்ப என்னடான்னா அப்படியே ரூலிங் பார்ட்டியிலே சேர்ந்து த்தாதா மாதிரி ஆயி இப்ப இவர்தான் வட்ட செயலாளர். மந்திரிக்கு அக்கவுண்ட்ல கலெக்சன் கட்டுறவுரு இவருதான். வெளியில சொன்னா வெட்கக்கேடு எனக்கு பேருதான் மானேஜர்" சுற்றும் முற்றும் ஒரு பார்வையை செலுத்திவிட்டு நெருங்கி வந்து "இது தேவுடியா தொழிலு சார், என்னடா இப்படி சொல்றேன்னு நெனக்காதீங்க பணத்துக்காக எவனெவங்கிட்டயோ பல்ல காட்டி என்ன உத்தியோகம் சார் இது."

முதலியார் பையனுக்கு முகம் சுருங்கி வியப்பானது.

"பாருங்க இந்த காஷியர் மாதிரி நானும் வர்றவன்கிட்ட எல்லாம் ஏடாகூடமா நடந்தா என்னா ஆகும் நெலம. நமக்கு நாலும் புரியற வாசி இப்புடி ஸ்மூத்தா போக முடியுது"

"சரிதான். எங்ககிட்ட நடந்த மாதிரி, அந்த காஷியர் இந்தாளுகிட்ட நடந்தா அடிச்சிகிட்டுதான் நிக்கணும்."

"அதுக்கெல்லாம் மெச்சூரிட்டி வேணும் சார், என்ன எடுத்துக்குங்க ..ந்தவன் ஒண்ணாம் நம்பர் ரௌ..ன்னு எனக்குத் தெரியும். எதுக்கு அவன வி.ஐ.பி மாதிரி டீல் பண்றேன். இன்னைக்கு அவன் ரூலிங் பார்ட்டி. தெனம் பினாமியா வந்து கலெக்சன் கட்டுறான். பொறுக்கி பய..னேன்னு அப்ரோச் பண்ணா நிம்மதியா இந்த சீட்ல உட்கார்ந்து வேல செய்ய முடியுமா? சும்மா சீட்ல வந்து உட்கார்ந்தா போதுமா சார். சாமர்த்தியம் வேணும்."

"அது எல்லாருக்கும் வராது சார். ஆபீஸ் டிசிப்ளின், காமன் சென்ஸ் எதெல்லாம் சொல்லிக் கொடுத்து வராது சார். நானும் அனுபவத்துல பார்த்துட்டேன்."

மானேஜருடைய நடத்தையைப் பாராட்டுவது போல அனுபவத்தைத் தீவிரமாகப் பகிர்ந்து கொண்டான். இடையே பியூன் அறைக்குள் வர "என்னப்பா கதவு திறந்தா ஏதோ பேட் ஸ்மல் வரது"

"மேல லேவட்ரி குழா லீக் ஆவுது போலிருக்கு சார். ஸ்வீப்பருக்கு சொல்லியிருக்கோம்" என்றார் பியூன் ராமு.

"மொதல்ல இந்த மேல் தட்ல இருக்கும் ஊதுவத்திய எடுத்து கொளுத்திவை" என்று சாமி படத்துக்கு அருகில் சுவரில் இருந்த இடத்தைக் காண்பித்தார் மானேஜர்.

"ஸ்மல் பிரமாதம் சார்! ஊதுபத்தி என்ன பிராண்ட்?" முதலியார் பையன் கேட்டான்.

வாசனையில் லயித்துப் போனார்கள் இருவரும். ●

படிப்பகம்

www.padippakam.com

தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்களிடம்

# தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்

| அரசின் அடக்குமுறை | மக்கள் ஆதரவுடன் |
| --- | --- |
| • தேர்தல் ஆணையகத்தின் கெடுபிடி | ✡ சுவர் எழுத்துக்கள், தட்டிகள் |
| • போலீசின் அடக்குமுறை | ✡ பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், சைக்கிள் பேரணி |
| • ஓட்டுக்கட்சிகளின் எதிர்ப்புகள் | ✡ வெளியீடு, பிரசுரம், பாடல் - பேச்சு ஒலிப்பேழைகள் |
| • கைது, வழக்கு, அச்சுறுத்தல்கள் | |

ஒரு வருடத்திற்கு முன்பு திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கத்தை தமிழகம் முழுவதும் நடத்தினோம். பல இடங்களில் தாக்குதல், கைது, சிறை, வழக்கு என அடக்குமுறைகளை எதிர்கொண்டோம். நாம் வெளியிட்ட திடீர் பணக்கார அரசியல் ரவுடிகள் பட்டியலில் உள்ள பெரும்பாலான அ.தி.மு.க. காலிகளுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிட்டவில்லை. அடக்கு முறைகளை தீரத்துடன் நாம் எதிர்கொண்ட போது தி.மு.க. வெறும் அறிக்கை அரசியல் மூலம் அறிவாலயத்தில் முடங்கியிருந்தது. இன்று ஜெ.எதிர்ப்பு அலையில் ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

ஆனால் இன்றைக்கிருக்கும் போலி ஜனநாயகமும்-அதன் தேர்தல், சட்டமன்றம், பாராளுமன்றம் போன்றவைகளும் மக்களைத் தற்காலிகமாக ஏமாற்றப் பயன்படுகின்றன. இவற்றைத் தகர்த்தெறிந்து, அரசியல்-அமைப்பாக மக்கள் அணி திரளுவதே புரட்சிக்கான முதல்படி என்ற நக்சல்பாரி அரசியலை ஏற்றுப் செயல்படுகின்ற நாம் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு எதிரான இயக்கத்தின் தொடர்ச்சியாக தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தை தமிழகம் முழுவதும் வீச்சாகக் கொண்டு சென்றோம்.

"இன்றைக்கு அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஏற்பட்ட கதியைப் புரிந்து கொண்டு நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். இல்லையேல் 5 ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கும் அதே கதிதான்". என்று கருணாநிதியே தமது கட்சியினரை எச்சரிக்கும் அளவுக்கு தமிழக மக்கள் இத்தேர்தலில் சாதனை புரிந்துள்ளார்கள். அந்த அளவுக்கு ஆளும் கட்சி வேட்பாளர்கள், மந்திரிகளை தாக்கி விரட்டியடித்து இந்திய அரசியல் வானில் முதன் முறையாக முன்னுதாரணம் படைத்துள்ளார்கள் தமிழ் மக்கள். அந்த வகையில் நமது தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நாட்டு மக்களை நக்சல்பாரி பாதையில் அணிதிரள வேண்டும் என்ற பிரச்சாரத்தை செயலுக்கத்துடன் கொண்டு சென்றது.

### திருச்சி

● தேர்தல் ஆணையத்தின் ஆணைகளுக்கு ஓட்டுக் கட்சிகள் அரண்டிருந்த நேரம், திருச்சி மாநகரெங்கும் சுவர்கள் தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களுடன் கம்பீரமாகக் காட்சியளித்தது. சோம்பியிருந்த போலீசு 10 நாட்கள் கழித்து சுவரெழுத்தை அழித்து தனது 'ஜனநாயகக் கடமையை' நிறைவேற்றியது. எழுதிய தோழர்கள் 5 பேரை கைது செய்தது.

ஓட்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஓட்டுக் கட்சி ஓட்டுண்ணிகள் அவர்களது சுவரெழுத்து அழிக்கப்பட்ட போதும் வாய் மூடி இருந்தனர். பெயரளவு ஜனநாயகத்திற்கும் குழி தோண்டும் தேர்தல் ஆணையத்தை எதிர்த்து நகரெங்கும் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. சுவர் போனாலென்ன, அடுத்து 10,000 சிறு சுவரொட்டிகள் நகரெங்கும் மக்களது பார்வைக்கு ஒட்டப்பட்டது. மேலும் டயர் தட்டி, ஓவியத் தட்டிகள் என்று பிரச்சாரம் தொடர்ந்தது. ஜெயாவும், ராவும் செருப்பில் அமர்ந்து பேசுவதைப் போன்ற ஒரு தட்டியை மக்கள் வரவேற்றனர். பொதுக்கூட்ட அனுமதிக்கு போலீசு இழுத்தடித்தாலும் உயர்நீதி மன்றத்தில் வழக்கு போட்டதால் 5 பொதுக் கூட்டங்கள் நகரின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.

ஒரு நாள் பிரச்சாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட உறையூர் பொதுக்கூட்டத்தில் 1500-க்கும் மேற்பட்ட மக்கள் கூடியது ஓட்டுக் கட்சிகளின் வயிற்றில் புளியைக் கரைத்தது. இரவு 10 மணிக்கு கலை நிகழ்ச்சி நடைபெறும்போது சீக்கிரம் முடிக்க வேண்டுமென போலீசு வற்புறுத்திய போது பகுதி மக்கள் போலீசை எதிர்த்து முழக்கமிட்டனர்.

தி.மு.க. வேட்பாளர் பரணிகுமாரை பு.மா.இ.மு. தோழர்கள் திருப்பி அனுப்பியதற்காக தி.மு.க.வினர் போலீசுடன் கூட்டு சேர்ந்து தோழர்கள் மூவரைக் கைது செய்ய உதவினர். உடனே அ.தி.மு.க.வினர் தமது தேர்தல் அலுவலக ஒலிபெருக்கி மூலம் 'பு.மா.இ.மு.விற்கு சர்வ கட்சிகளும் சேர்ந்து பாடம் புகட்ட வேண்டும், இவர்கள் பொறுக்கிகள், ரவுடிகள்'' என வசைமாரி பொழிந்ததோடு தோழர்கள் வீட்டிற்குச் சென்று பெற்றோர்களை எச்சரித்தனர். கேள்விப்பட்டவுடன் தோழர்கள் - அ.தி.மு.க.வினர் வீடுகளுக்கு சென்று 'எங்களை கட்டி வைத்து உதைப்போம் என்றாயே செய் பார்க்கலாம்' என பதிலடி கொடுத்தனர். மக்கள் நமக்கு ஆதரவளிக்க, ஓட்டுக் கட்சியினர் ஒடுங்கினர்.

முன்னாள் மந்திரி கு.ப. கிருஷ்ணனை பு.மா.இ.மு. தோழர்கள் மக்களைத் திரட்டி மறிக்க, போலீசு கெஞ்சிக் கூத்தாடி மந்திரியை மீட்டுச் சென்றது.

'ஓட்டுப் போடாதே புரட்சி செய்' பாடல் ஒலிப்பேழை வெளியான அன்று நாள்முழுவதும் பல இடங்களில் ஒலிபரப்பப்பட்டது. மக்களும், இளைஞர்களும் ஆர்வத்துடன் கேட்டனர். பாராட்டினர். 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டு முன்பு பாடல் ஒலி பரப்ப வேண்டினார். அவரது விருப்பம் நிறைவேற்றப்பட்டது.

### பெருவளப்பூர்

● 'தேர்தலைப் புறக்கணிக்க கோருகிறீர்கள். சரி. இது எப்போது நடைமுறைக்கு வரும்' என வியப்புடன் கேள்வி கேட்டனர் பெருவளப்பூர் நகர மக்கள். இங்கு வி.வி.மு. சார்பாக தேர்தல் புறக்கணிப்பு அலுவலகம் தொடங்கப்பட்டு 4 ஊர்களில் பொதுக்கூட்டமும், 15 கிராமங்களில் தெருமுனைக் கூட்டமும் நடைபெற்றது.

### சீர்காழி

● இறால் பண்ணை அழிப்பு போராட்டத்திற்காக ஆதரவளித்த சீர்காழி வட்டார மக்கள் நமது தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்திற்கு உற்சாகத்துடன் வரவேற்றனர். இரண்டு பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது.

### மதுரை

● மதுரை நகரின் நுழைவாயிலில், இருந்த பெரிய விளம்பரப் பலகை, தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களைத் தாங்கியவாறு வெளியூர் பயணிகளை வரவேற்றது. 3 பொதுக்கூட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றது. ஓரிடத்தில் நமது கூட்டத்தை ஆர்வமுடன் கவனித்த இளைஞர்கள் அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்தனர்..

தேர்தலின் இறுதி நாட்களில் தெருமுனைக் கூட்டம் நடத்தும் பொழுது ஓட்டுக் கேட்க வந்த அ.தி.மு.க. - காங். கும்பல் தோழர்களுடன் தகராறு செய்தனர். அதில் தலைமை வகித்த அ.தி.மு.க. ரவுடியை தோழர்கள் உடன் தாக்கினர். காங். வேட்பாளர் பயந்து ஓடினார். அடிவாங்கிய ரவுடி அருகிலுள்ள கடையில் பாட்டிலை உடைத்து தோழர்களைத் தாக்க முயற்சிக்க பகுதி மக்கள் நமக்கு ஆதரவாகத் திரண்டனர். உடைத்த பாட்



படிப்பகம்

www.padippakam.com

டிலுக்கு பணம் கொடுத்துவிட்டு மன்னிப்பும் கேட்டு ஓட்டுக் கட்சியினர் பின்வாங்கினர்.

### வேலூர்

● "தேர்தல் தேதி அறிவிப்பதற்கு முன்பே தேர்தல் புறக்கணிப்பிற்கு எழுதுகிறீர்களே, பிரச்சனை ஏதும் வராதா? எதற்கும் கவனமாக இருங்கள்," வேலூர் நகர மக்கள் நமது சுவரெழுத்தைக் கண்டு தெரிவித்த கருத்துக்கள். வேறு சிலர் 'நீங்கள் மட்டுமே இப்படி தைரியமாக எழுத முடியும்' என்று பாராட்டினர். பொறுக்காத போலீசு சுவரெழுத்தை அழித்து மகிழ்ந்தது. இருப்பினும் சுவரொட்டிகள், டயர் தட்டி மூலம் பிரச்சாரம் தொடர்ந்தது. திட்டமிட்டபடி 2 பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. தேர்தல் பார்வையாளர்கள் வருகிறார்கள் என்று நமது தட்டிகளையும், பேனரையும் எடுத்துச் சென்ற போலீசிடம் தோழர்கள் வாக்குவாதம் செய்து வாங்கிவந்தனர்.

சத்துவாச்சேரியில் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது கலை நிகழ்ச்சி நடத்தக்கூடாது என்று அடாவடி செய்த போலீசை மேடையில் அம்பலப்படுத்தி பின்னர் 4 பாடல்களும் பாடப்பட்டது. அடுத்ததாக 4 நாட்களில் 35 இடங்களில் தெரு முனைக் கூட்டமும், சைக்கிள் பேரணியும் நடைபெற்றது. மக்கள் குளிர்பானம், இளநீர் தந்து உபசரித்தனர். "எவனாவது ஓட்டுக்கேட்டு வரட்டும் நீங்கள் கூறியதைப் போல விரட்டியடிக்கிறோம்" என்று ஒரு இடத்தில் பெண்கள் உறுதியளித்தார்கள்.

### கரூர்

● ஒரு வாரகாலம் கரூர் நகர மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்ற தேர்தல் புறக்கணிப்பு சுவரெழுத்தை அழித்த போலீசு, வழக்கு பதிவு செய்திருப்பதாக தினசரிகளில் செய்தி வெளியிட்டு மகிழ்ந்தது. இங்கும் சுவரெழுத்தை வீடியோ படம் பிடித்த போலீசு, க்யூ. பிரிவு மூலம் தேர்தல் புறக்கணிப்பிற்கு என்ன செய்ய போகிறீர்கள் என்று நோட்டம் பார்த்தது. பொதுக்கூட்ட அனுமதிக்கு அவனைப் பார் இவனைப்பார் என்று அலைக்கழித்து இறுதியில் அனுமதி மறுத்தது. இருப்பினும் தெருமுனைக்கூட்டம், சைக்கிள் பேரணி மூலம் இயக்கம் வீச்சாக நடைபெற்றது.

### கும்பகோணம்

● 'ஓட்டுக்கட்சிகளுக்கு மாற்று கிடையாது' என்று விரக்தியிலிருந்த கும்பகோணம் நகர மக்களிடம் சுவரொட்டி, பொதுக்கூட்டம் மூலம் நம்பிக்கையூட்டும் வண்ணம் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடைபெற்றது.

### உசிலம்பட்டி

● உசிலம்பட்டி வட்டாரத்தில் 50 இடங்களில் சுவரெழுத்தும், 60 டயர் தட்டிகளும் கட்டி மக்கள் பிரமிக்கும் வண்ணம் தேர்தல் புறக்கணிப்பை ஆரம்பித்தனர் விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்கள்.

"உங்களிடம் வரும் வேட்பாளரை விட இந்த எருமை எவ்வளவோ மேலானது. யாருக்கும் ஓட்டுப் போடாதீர்கள். போட்டுத்தான் ஆக வேண்டும் என்றால் இந்த எருமைக்கு ஓட்டுப் போடுங்கள்" என்ற வண்ணம் சுற்று கிராமங்களில் சைக்கிள் பேரணியும், எருமை வேட்பாளர் ஊர்வலமும் நடைபெற்றது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளூர் எருமை பிடிக்கப்பட்டு ஊர்வலம் நடந்தது. மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். 2 பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

### கர்நாடக மாநிலம்

● கர்நாடக மாநிலம் பெங்களூர் மற்றும், கோலார் தங்க வயலில், புதிய ஜனநாயகம் வாசகர் வட்டம் சார்பாக தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. கன்னடத்தில் அச்சிடப்பட்ட 2500 துண்டு பிரசுரங்கள், 250 சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டது. "யார் நீங்கள் புதிதாக சொல்கிறீர்கள், ஓட்டுப் போடாமல் என்ன செய்வது," என்று மக்கள் ஆவலோடு வினவினர். பல இடங்களில் இளைஞர்கள் நிதி உதவி செய்ததோடு அமைப்பில் சேர விருப்பம் தெரிவித்தனர். பெங்களூரில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை 3 நாள் கழித்து தண்ணீர் விட்டுக் கிழித்தது போலீசு. கோலார் நகரில் பகலில் ஒட்டும்போதே சுவரொட்டிகளை ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக படித்து பேசிக் கொண்டனர்.

அதேபோன்று ரெய்ச்சூர் நகரம் மற்றும் சுற்று வட்டாரத்தில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (கிராந்திகாரி வித்யார்தி - யுவஜன ரங்கா) 3000 துண்டு பிரசுரங்கள் விநியோகித்து பிரச்சாரம் செய்தது. 10 கிராமங்களில் தெருமுனைக்கூட்டம் நடத்தப்பட்டது. மக்கள் ஆவலுடன் பங்கு கொண்டார்கள்.

மழை இடையிடையே பெய்த போதும் 1000-த்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறுதிவரை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். "நீங்கள் பொதுக்கூட்டம் நடத்தினால் கலவரம் வரும். அப்படிக் கலவரம் நடந்தால் உங்களைத் தான் கைது செய்வேன்" என்று மிரட்டிய டி.எஸ்.பி. நமது பொதுக்கூட்டத்திற்கு மக்கள் அளித்த ஆதரவைக் கண்டு திகைத்தார். 'கலவரத்தை' அடக்குவதற்காக வருவித்திருந்த போலீஸ் படையை பின்னர் அனுப்பி விட்டார். இரவு 12 மணிக்கு கூட்டத்தை முடிக்குமாறு போலீசு தகராறு செய்தது. அப்போது கலைக் குழுவினர் போலீசை திருத்த முடி

யுமா என்ற பாடலைப் பாடிக் கொண்டி
ருந்தனர்.

தேர்தலின் கடைசி வாரத்தில் அல
கரிக்கப்பட்ட ட்ராக்டர் மூலம் 30 கிராம
களில் பிரச்சாரம் செய்யப்பட்டது. எந்
வேட்பாளரையும் ஊரினுள் அனுமதி
காத கரிசல்பட்டி கிராம மக்கள் நமது
விளக்கத்தை கேட்டபின் ஊருக்குள்
நுழைய அனுமதி தந்து ஆதரவளித்தனர்

### சென்னை

● சுண்ணாம்பும் வாளியுமாக
அலைந்து கொண்டு தமிழகம் முழுவது
சுவரெழுத்துக்களை அழித்துக் கொண்டி
ருந்த போலீசை சென்னைத் தோழர்க
எப்படி ஏமாற்றினார்கள்? நகரில் உள்
மின்சார இருப்புப் பாதை அருகே எழு
தப்பட்ட சுவரெழுத்துக்கள் இறுதிவ
அழிக்கப்படவில்லை. சேசனி
ஆணையை சிரமேற்கொண்டு, கல்லை
யும், முள்ளையும், சாக்கடையையு
தாண்டி சுவரெழுத்துக்களை அழிக்
சென்னை போலீசு தயாராக இல்லை.

500 சிறு சுவரொட்டிகள் மின்சா
ரயில் வண்டிகள், பேருந்துகள், தேநீர்
கடைகளில் ஒட்டப்பட்டது. ஒரு வா
காலம் நடைபெற்ற இரயில் பெட்டி பிர
சாரத்தில் மக்கள் நிதி உதவி செய்
தோடு, ஆதரவாக கருத்துக்களையு
வெளியிட்டனர். நகரில் 4 பொதுக்கூ
டங்கள் நடைபெற்றன. சைதாப்பேட்டை
பொதுக்கூட்டத்திற்கு இறுதி நேரத்தி
கடைவசூல் செய்தபோதும் வியாபா
கள் உணர்வுடன் 'ஆதரவளித்தார்கள்
'வேறு எந்த கட்சிக்கும் பணம் தந்
தில்லை, உங்களுக்கு விருப்பத்தோடு
தருகிறேன்' என இரண்டு வியாபாரிக
தலா ரூ. 100 அளித்தனர். சைதை கூட்ட
தில் அருகே இருந்த அ.தி.மு.க. தேர்த
அலுவலகத்தில் இருந்த அனைவரு
மொத்த நிகழ்ச்சியையும் கவனித்தன
ஜெயாவை விமரிசிக்கும் போது முணு
ணுத்த சிலரை பகுதி தோழர்கள் அடக்
னர்.

### நெய்வேலி

● "ம.க.இ.க.-வினர் மே 1-ல் ஏத
வது இயக்கம் எடுப்பார்கள். அதே
போன்று தேர்தல் புறக்கணிப்பு இயக்க
எடுத்துள்ளனர்" இது நெய்வேலி போல
கம்யூனிஸ்டுகளின் வயிறெறிந்த வாக்கு
மூலம். மே-1ல் ம.க.இ.க. எடுக்கு
இயக்கங்களைக் (கருவறை நுழைவு
போராட்டம், இறால் பண்ணை அழிப்
போராட்டம்) கண்டு அரசும், ஆளு
வர்க்கங்களுக்கும்தான் பீதியடைவ
வழக்கம். தற்போது 'மார்க்சிஸ்டு' கட்
யினரும் இதில் சேர்ந்துள்ளனர்.

இப்படி 'மார்க்சிஸ்டு'கள் மிரளு
வண்ணம் சுவரெழுத்தின் மூலம் தேர்த
புறக்கணிப்பு இயக்கத்தை நெய்வே
தொழிலாளர் பிரச்சாரக்குழுத் தோழர்க
ஆரம்பித்தனர். 5 நாட்களுக்குப் பிற



படிப்பகம்

www.padippakam.com

போலீசு சுவர்களுக்கு வெள்ளையடித்தது. 11.4.96 நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு தேர்தல் புறக்கணிப்பு பற்றி பேசக் கூடாது என்று போலீசு அனுமதி அளித்தது. அதை மீறி தேர்தல் மோசடியைப் பற்றி தோழர். ஜெயகாந்த்சிங் சிறப்புரையாற்றினார். எனவே 18.4.96 மற்றொரு பொதுக்கூட்டத்திற்கு அனுமதி தர மறுத்த போலீசுக்கு சாலை மறியல் செய்வோம் என்று சொன்ன உடன் அனுமதி கிடைத்தது.

தேர்தலுக்கு முதல் நாள் ஓட்டுப் போடாதீர்கள் என வீடு வீடாக பிரச்சாரம் செய்யப்பட்டது. வட்டம் 20,21,25,30 ஆகிய பகுதிகளில் நமது பிரச்சாரம் காரணமாக பெரும்பாலான மக்கள் வாக்களிக்க வில்லை.

### கோயம்புத்தூர்

● கோவை போலீசின் மெத்தனம் காரணமாக நகரில் சுவரெழுத்து 15 நாட்கள் அழிக்கப்படாமல் இருந்தது. தினகரன் நாளேடு சுவரெழுத்தை புகைப்படமாக வெளியிட்டிருந்தது. பொதுக்கூட்ட அனுமதியை மட்டும் போலீசு வழக்கம் போல சுறுசுறுப்புடன் மறுத்தது. பின்னர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்த உடன் (தீர்ப்பு வருவதற்குள்) வீடு தேடி வந்து அனுமதி அளித்தனர். தேதி மாற்றம், குறுகிய கால பிரச்சாரம் இவற்றை மீறி 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தேர்தலின் இறுதி நாட்களில் வீடு வீடாக பிரச்சாரம் விச்சாக நடைபெற்றது. பெண்கள் அமோக ஆதரவளித்தனர். ஒரு சில தாய்மார்கள் '5 பேராக செல்கிறீர்கள் எச்சரிக்கையாக செல்லுங்கள்' என்று கவலைப்பட்டனர். 'அம்மா ஓட்டு போட வேண்டாம்' என்று சொன்னவுடன் திகைப்படைந்த ஒரு தாய், 'இத்தனை நாளைக்குப் பிறகு இப்பத்தான் புத்தி வந்ததா உங்களுக்கு (!) என்றார். ''அவனவன் கொள்ளையடிக்கிறான், விலைவாசியைப் பற்றி யார் கவலைப்படறான், நான் 100 பேருக்கு ஓட்டுப் போடாதீங்கன்னு சொல்றேன்'' என்று கை குலுக்கி வாழ்த்து தெரிவித்தார் மற்றொரு தாய். இப்பகுதியில் ஓட்டுப் போடாதவர்களின் எண்ணிக்கை 5000.

வேட்பாளர்களை விரட்டியடித்த பல பகுதி தமிழக மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தும், அதையே முன்னுதாரணமாகக் கொள்ளும் படி மக்களுக்கு அறைகூவல் விடுத்தும். 2 நாட்கள் உடுமலை, திருப்பூர் பேருந்து நிலையங்களில் பிரச்சாரம் நடைபெற்றது.

### சிதம்பரனார் மாவட்டம்

● வ.உ.சி. மாவட்டம் திருச்செந்தூர், திருவைகுண்டம், ஆறுமுகநேரி, பரமன் குறிச்சி, மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் சுவரெழுத்து, சுவரொட்டி மூலம் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் நடைபெற்றது. திருச்செந்தூரில் பேருந்து, இரயில் வண்டிகளில் கதவுச்சீட்டு ஒட்டப்பட்டு பிரச்சாரம் நடைபெற்றது.

### கம்பம்

● மதுரை மாவட்டம் கம்பம் வட்டாரத்தில் சுவர் கிடைக்காமல் ஏனைய ஓட்டுக் கட்சிகள் திண்டாடினார்கள். காரணம் சேசனின் தேர்தல் விதிகளுக்குப் பயந்து ஓட்டுக்கட்சியினர் ஒடுங்கியிருந்தபோது வி.வி.மு. தோழர்கள் 100 இடங்களில் சுவரெழுத்துக்களை முடித்திருந்தார்கள். அதேபோன்று வட்டாரத்தில் 200 டயர் தட்டிகளும் கட்டப்பட்டது. எங்கு திரும்பினும் 'ஓட்டுப் போடாதே புரட்சி செய்!' என்ற முழக்கமே மக்களை வரவேற்றது.

திட்டமிடப்பட்ட 2 பொதுக் கூட்டங்களுக்கு ஒன்றிற்கு மட்டும் போலீசு அனுமதி அளித்தது. கடைசி 3 நாட்களில் சுற்று வட்டாரத்தில் சுமார் 10 ஊர்களில் வீதி நாடகமும், தெருமுனைக் கூட்டமும் நடைபெற்றது. 'எனக்கு, ஓட்டுப் போடுங்கள்' என்று கேட்கும் கழுதை வேட்பாளர் ஊர்வலம், கம்பம், தேவாரம் நகரங்களில் நடைபெற்றது. இடையிடையே மழை பெய்தாலும் 5000-க்கும் மேற்பட்ட மக்களிடம் பிரச்சாரம் சென்றது. ஆண்டிப்பட்டி வி.வி.மு. செயலர் தோழர். செல்வராசின் கல்யாணக் கதை கேளு ஒலிப்பேழை (ஜெ. வளர்ப்பு மகன் திருமணம்) கிராம மக்களிடம் உற்சாகமான வரவேற்பை பெற்றது.

### நாமக்கல்

● ''எங்களுக்கு ஓட்டுக் கிடைக்காமல் இருப்பதற்கு திட்டமிட்டு சுவரெழுத்து செய்கின்றீர்கள்'', என்று சேலம் மாவட்டம் நாமக்கல் நகர தி.மு.க.வினர் நம் மீது புகார் தெரிவித்தனர். அந்த அளவிற்கு, நாமக்கல், சேந்தமங்கலம் பகுதிகளில் நமது சுவரெழுத்துக்கள் ஓட்டுக் கட்சிகள் மத்தியில் பீதியைக் கிளப்பியது. டெல்லியில் (அல்) சேஷன் குரைக்கத் துவங்கிய உடன் போலீசு நமது சுவரெழுத்தை புகைப்படம், வீடியோ படம் எடுத்து இறுதியில் அழித்தது. எடுக்கப்பட்ட படங்கள் காவல் நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது, மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

திட்டமிடப்பட்ட 3 பொதுக்கூட்டங்களுக்கும் அனுமதி மறுத்த போலீசு, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்ட உடன், ''இனிமேல் கோர்ட்டுக்கு போக வேண்டாம், நாங்களே அனுமதி கொடுக்கிறோம்'' என்று அசடு வழிந்தது. குறுகிய காலமாக இருந்ததால் ஒரு பொதுக்கூட்டம் மட்டும் நடைபெற்றது. பொதுக்கூட்டம் நடைபெறும் அன்று செய்த் ஆட்டோ பிரச்சாரத்தில் பல இடங்களில் மக்கள் ஆட்டோவை நிறுத்தி அமைப்பை பற்றி விளக்கம் கேட்டார்கள். 2000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். ''இப்படி ஒரு அமைப்பு இருப்பதாக இன்றுதான் எங்களுக்குத் தெரியும்'' என்று விருப்பத்துடன் பலர் முகவரி கொடுத்தனர்.

''இந்த எருமைக்கு ஓட்டுப் போடுங்கள் 2 கூடை சாணியும், பாலும் கொடுப்பார், சட்டசபைக்கு சென்று உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவார், அடிதடி வந்தால் பொறுமையாக இருப்பார்'' என்று எருமை வேட்பாளர் பிரச்சாரம் 17 இடங்களில் 3000 மக்களிடம் நடைபெற்றது. அந்த நாளில் கருணாநிதி, மூப்பனார் வந்ததால் தி.மு.க.வினர் ''எங்கள் தலைவரை வாடா, போடா, என்று கூட சொல்லுங்க, ஆனால் எருமை மாடை வைச்சு கேவலப்படுத்தாதீங்க'', என்று புலம்பினர். இக் கிராமங்களில் கணிசமான மக்கள் ஓட்டுப் போடவில்லை.

இப்பகுதியில் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளாக நாம் அறிவித்திருந்த முத்து, மஸ்தான் இருவரும் பின்னர் கைது செய்யப்பட்டனர். இத்தகைய சமூக விரோதிகள் மற்றும் தேவாரம் போன்ற போலீசு அதிகாரிகளை அம்பலப்படுத்தி பேசியதில் சில போலீஸார் பாராட்டு தெரிவித்து ரூ. 100 நன்கொடை கொடுத்தனர்.

### தருமபுரி மாவட்டம்

● தர்மபுரி மாவட்டத்தில் வழக்கம் போல் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி அளிக்க மறுத்த போலீசை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததும், பெண்ணாகரத்தில் மட்டும் மாலை 4 மணி முதல் 8 மணி வரை கூட்டம் நடத்த அனுமதி தந்தது போலீசு. 1 நாள் பிரச்சாரத்தில் 2000-க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து கூட்டத்தை சிறப்பித்தார்கள். மற்றபடி மாவட்டம் முழுவதும் சுவரெழுத்து, சுவரொட்டி, தெருமுனைக்கூட்டம், சைக்கிள் பேரணி என இயக்கம் உயிர்ப்புடன் நடைபெற்றது. சென்ற இடமெல்லாம் குடிக்க கூழைக் கொடுத்து, அவர்களால் இயன்ற நிதி உதவி செய்து மக்கள் ஆதரித்தனர்.

### இராசபாளையம்

● ராசபாளையத்தில் சாதிக் கலவரம் காரணமாக பொதுக்கூட்டம் நடைபெறவில்லை. சுவரெழுத்து, சுவரொட்டி, தட்டிகள் மூலம் பு.மா.இ.மு. பிரச்சாரத்தை மக்களிடம் மேற்கொண்டது.

### சிவகிரி

● ராசபாளையம் அருகே சிவகரி நகரில் இறுதி வரை இழுத்தடித்த போலீசு பொதுக் கூட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை. 10 இடங்களில் கலை நிகழ்ச்சியுடன் தெரு முனைக் கூட்டம் நடைபெற்றது.

● மேலும் தஞ்சை மாவட்டம், அரியலூர், சங்கராபுரம், திருவெண்ணெய் நல்லூர், ஆண்டிப்பட்டி, பரமக்குடி, திருப்புவனம், சிவகங்கை, கருப்பாயூரணி, உத்தமபாளையம் என பல பகுதிகளில் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# பொது சிவில் சட்டம்

# மாயையும் உண்மையும்

## 3

♦ சூரியன்

“ஒரு நாடு, ஒரு மக்கள், ஒரு சட்டம்'' - என்ற முழக்கத்தின் கீழ் இந்து சட்டத்தையே அனைவருக்குமான சிவில் சட்டமாகத் திணிக்க பாரதீய ஜனதா முயற்சிக்கின்றது. காங்கிரசு மற்றும் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கட்சிகள் அனைத்தும் இந்திய மதச்சார்பின்மையின் பெயரால் பொதுசிவில் சட்டத்தை எதிர்க்கின்றன.

இவர்கள் ஒருபுறம் இருக்க, வலது இடது போலி - கம்யூனிஸ்டுகள், இசுலாமியப் பழமைவாதத்தை எதிர்க்கும் சீர்திருத்தவாதிகள், பெண்ணுரிமை இயக்கங்கள், சில புரட்சிகர இயக்கங்கள் மற்றும் பல அறிவு ஜீவிகள் பொது சிவில் சட்டம் குறித்த விவாதத்தில் தெரிவிக்கும் கருத்துக்கள் நமது பரிசீலனைக்கு உரியவை.

•சென்ற டிசம்பர் மாதம் டெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் (மார்க்சிஸ்டு கட்சியுடன் இணைந்தது) மாநாடு, பொது சிவில் சட்டம் குறித்த தனது கருத்தைத் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது. அதற்கு நம்பூதிரிபாடு ஒரு பொழிப்புரை எழுதியுள்ளார்.

''ஒரு பொது சிவில் சட்டத்தை உடனே நிறைவேற்றுவதோ அல்லது ஷரியத் சட்டத்தை அப்படியே பாதுகாப்பதோ - இரண்டுமே இந்தியப் பெண்களின் உடனடித் தேவை அல்ல; மாறாக, ஒவ்வொரு மதத்தின் தனிநபர் சட்டமும், 'ஜனநாயகம், சமூக நீதி, ஆண்-பெண் சமத்துவம்' போன்ற நவீனக் கொள்கைகளுக்கு எதிராக பெண்களின் உரிமையில் எந்த அளவுக்குக் குறுக்கிடுகின்றன என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும். ஏதேனும் ஒரு மதத்தின் தனிநபர் சட்டம் அவ்வாறு இந்தியப் பெண்ணின் உரிமையில் குறுக்கிட்டால் அது பொருத்தமான வகையில் திருத்தப்படவேண்டும்.''

அதாவது மதசா[...] பற்ற உரிமையியல் ச[...] டம் இப்போது தேவை[...] யில்லை. மதச்சட்டங்[...] ளையே சீர்திருத்தி ஜன[...] நாயகத்தன்மை கொண்டவையாக மாற்றினால் போது[...] என்கிறார் நம்பூதி[...] பாடு.

•மா.லெ (செங்கொடி[...] குழுவின் பத்திரிகை[...] யான 'ரெட் ஸ்டார்' நம்பூதிரியின் நிலை[...] பாட்டை வேறு வார்[...] தைகளில் கூறுகிறது.

''ஒரு படித்தான[...] உரிமையியல் சட்ட[...] மொத்த சமூக மாற்ற[...] நிகழ்வுப் போக்குடன் உருவாக்கப்பட[...] வேண்டிய ஒன்று. அதை மட்டும் தனி[...] யாக உருவாக்குவதோ மேலிருந்த[...] திணிப்பதோ முடியாது. ஒவ்வொரு மதத்[...] தின் தனிநபர் சட்டங்களுக்குள்ளும் ஏற்ப[...] டுகின்ற மாற்றத்தினூடாகவும், சமூகத்தி[...] நடைபெறும் முற்போக்கான போராட்[...] டங்களின் விளைவாகத் தோன்றும் அ[...] தந்த மதத்தைச் சேர்ந்த பெண்கள் மற்று[...] ஒடுக்கப்பட்ட பிரிவினரின் போராட்டங்[...] களினூடாக அது உருவாகி நடைமு[...] றைக்கு வருகிறது.''

•இசுலாமியப் பழமைவாதிகளுக்கெதி[...] ராகப் போராடி வரும் அஸ்கார் அலி[...] எஞ்சினியர் என்ற அறிஞரும் எந்[...]

## சென்ற இதழ்களில்

பொது சிவில் சட்டம் குறித்த கட்டுரைத் தொடரின் மூன்றாவது பகுதி இது. இதழ், நீண்ட இடைவெளிக்குப் பின் வெளிவருவதினால் கடந்த இரு இதழ்களில் இத்தொடரில் இடம்பெற்ற விசயங்களை சுருக்கமாகத் தருகிறோம்.

மதச்சார்பின்மைக் கோட்பாட்டின் தொடர்ச்சியாக மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது தான் மதசார்பற்ற சிவில் சட்டம். இந்தியாவில் அத்தகையதொரு சட்டம் இல்லை. ஒவ்வொரு மதத்திற்குமான தனித்தனி சிவில் சட்டங்கள்தான் உள்ளன. இந்நிலையை மாற்றி இந்தியர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டம் கொண்டு வரப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து இந்து சட்டத்தை மறைமுகமாக அனைவரின் . மீதும் திணிக்க பாரதிய ஜனதா முயல்கிறது. முஸ்லீம்களின் நான்குதார மணமுறை மற்றும் மணவிலக்கு முறையை மட்டும் குறிவைத்துத் தாக்குவதன் மூலம் இந்து தனிநபர் சட்டம் ரொம்பவும் முற்போக்கானது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த பா.ஜனதா முயல்கிறது.

இதை அம்பலப்படுத்தும் வகையில் இந்து சட்டத்தின் . ஆணாதிக்க, சாதி ஆதிக்கத் தன்மைகளை ஆதாரங்களோடு அம்பலப்படுத்துகிறது கட்டுரையின் முதல் பகுதி. இல்லாத இந்து மதத்தை சட்டரீதியாக செயற்கையாக உருவாக்கும் சதியின் ஒரு அங்கம்தான் இந்து தனிநபர் சட்டம் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. இந்து சட்டம் மற்றும் முஸ்லீம் சட்டம் ஆகியவை குறித்த ஒரு ஒப்பீடும் இடம் பெற்றுள்ளது.

அரசியலிலிருந்து மதத்தைப் பிரிக்கக் கூடாது என்று வாதாடும் பாரதிய ஜனதா குடும்பத்திலிருந்து மட்டும் மதத்தைப் பிரிக்க வேண்டும் என்று கூறும் இரட்டை வேடத்தை இரண்டாவது பகுதி அம்பலப்படுத்துகிறது.

முஸ்லீம்கள் சிறுபான்மையாக உள்ள மற்ற நாடுகளில் அவர்கள் ஒரு பொது சிவில் சட்டத்தினை ஏற்கும்போது இந்தியாவில் மட்டும் அவ்வாறு ஏற்க மறுப்பதேன் என்ற பாரதீய ஜனதாவின் கேள்விக்கு எந்தக் கட்சியும் பதில் அளிக்காமல் இருப்பதைச் சுட்டிக் காட்டி, இந்தக் கேள்விக்கான பதிலில்தான் பிரச்சினையின் தீர்வே இருக்கிறது என்பதைக் கட்டுரை வலியுறுத்துகிறது.

''அரசு மற்றும் சிவில் சமூகத்தின்[...] மீது எவ்வித அதிகாரமும் செல்வாக்கும்[...] செலுத்தவியலாமல் மதத்தைத் துண்டிப்ப[...] து'' என்ற மதச்சார்பின்மைக் கோட்பாட்[...] டுக்குப் பதிலாக, அனைத்து மதங்களை[...] யும் சமமாக நடத்துதல் என்ற புதிய மோச[...] டியான விளக்கம் இந்திய மதச்சார்பின்[...] மைக்குத் தரப்பட்டிருப்பதை கட்டுரை[...] சுட்டிக் காட்டுகிறது. இந்திய அரசியல்[...] சட்டத்தில் மதம், மதச்சார்பின்மை ஆகி[...] யவை வரையறுக்கப்படவில்லை என்ப[...] துடன், மதச் சார்பின்மைக்கு அரசியல்[...] சட்டரீதியான எந்தவித உத்திரவாதமும்[...] கிடையாது. மேலும் மதம் அல்லது மத[...] நம்பிக்கை குறித்து உச்சநீதிமன்றம்[...] அளித்துள்ள விளக்கங்கள் மதச்சார்பின்[...] மைக் கோட்பாட்டுக்கே எதிரானவை.

எனவே மதச்சார்பற்ற அரசு நிலவா[...] மல் மதச்சார்பற்ற சிவில் சட்டம் இருக்க[...] முடியாது. மதச்சார்பற்ற சிவில் சட்டத்துக்[...] கான போராட்டம் மதச்சார்பின்மைக்[...] கான போராட்டத்திலிருந்து பிரிக்க முடி[...] யாதது. இந்தப் போராட்டத்தை மதச்சார்[...] பற்ற ஜனநாயக சக்திகள் முன்னெடுக்க[...] வேண்டும் என்று கட்டுரை வலியுறுத்துகிறது.



படிப்பகம்

வொரு சிவில் சட்டமும் மேலிருந்து திணிக்கப்படுவதை எதிர்க்கிறார். ஒவ்வொரு மதத்தின் தனிநபர் சட்டமும் அம்மதத்தைச் சேர்ந்தவர்களது போராட்டத்தால் ஜனநாயகப் படுத்தப்படவேண்டும் என்ற கருத்தையே முன் வைக்கிறார். சிவில் வாழ்க்கையின் மீது மதம் செலுத்தும் அதிகாரத்தை மறுக்காமல் மதக் கோட்பாடுகளின் துணை கொண்டே அவற்றை ஜனநாயகப்படுத்த இயலும் என்று கருதுகிறார்.

**மதச்சார்பற்ற அரசு நிலவாமல் மதச்சார்பற்ற சிவில் சட்டம் இருக்க முடியாது. மதச்சார்பற்ற சிவில் சட்டத்துக்கான போராட்டம் மதச்சார்பின்மைக்கான போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதது.**



மேற்குலகின் கோட்பாடான மதச்சார்பின்மையை நமது நாட்டுக்கு அப்படியே பொருத்தவியலாது என்றும் வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் நமது மதச்சார்பின்மையின் ரகசியம் என்றும் ''பின் - நவீனத்துவ காலத்தில், இன்று மேற்குலகம் புரிந்து கொண்டுள்ள உண்மையை இந்தியர்களாகிய நாம் பல நூற்றாண்டுகளாகவே அறிந்திருக்கிறோம்'' என்றும் கூறுகிறார் (இந்து 11.6.96)

•எந்தவொரு சமூகமும் கட்டாயத்தின் கீழ், தங்கள் மரபுகளைச் சீர்திருத்தவைக்கக் கூடாது; மதத் தனிநபர் சட்டமும் இருக்கட்டும், மதச்சார்பற்ற சிவில் சட்டமும் இருக்கட்டும் - தனக்கு எது தேவை என்பதைப் பெண் தீர்மானிக்கட்டும் என்கிறார் பெண்ணியவாதி மதுகிஷ்வார்.

•தமது மரபுகளை உயர்த்திப் பிடிக்கும் உரிமை ஒவ்வொரு சமூகத்திற்கும் உண்டு என்றும், எந்தவொரு அரசு உருவாக்குகின்ற சட்டத் தொகுப்பும் அதிகார மயமாக்கலுக்கு மட்டுமே பயன்படும் என்றும் அது பன்முகத்தன்மைக்கு எதிரானது என்றும் வாதிடுகிறார்கள் பின் நவீனத்துவவாத அறிஞர்கள்.

•சிவில் சட்டம் குறித்த விவாதமெல்லாம் வெட்டிப் பேச்சு என்றும், இந்தச் சட்டங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கிராமப் பஞ்சாயத்துகள் பல பிரச்சினைகளில் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் சிலர் கூறுகின்றனர்.

•மதச்சார்பற்ற, ஜனநாயகரீதியிலான சிவில் சட்டமொன்று தேவை என்று கருத்தளவில் ஏற்றுக் கொள்பவர்கள் பலரும், இந்துமத வெறி சக்திகள் மேலோங்கியிருக்கும் இன்றைய தருணத்தில் அதை நடைமுறைப் படுத்தவியலாது என்றும், காலம் கனியும் வரை காத்திருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர்.



**அந்தந்த மதக்கோட்பாடுகளில் உள்ள ஓரளவு முற்போக்கான அம்சங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றின் துணை கொண்டு மதச்சட்டத்தை ஜனநாயகப்படுத்தலாம் என்பது அஸ்கர் அலி எஞ்சினியரின் நிலைப்பாடு**

•'மதச்சார்பற்ற சிவில் சட்டத்திற்காகப் போராடுவதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் இசுலாமியப் பெண்கள் உள்ளிட்ட யாருமே இன்று அந்தக் கோரிக்கையை ஆதரிக்க மாட்டார்கள் என்பதுதான்' - இது மார்க்சிஸ்டு கட்சி சார்ந்த அறிவு ஜீவிகள் சிலரின் வாதம்.

•''சாதி ஒழிப்பு, மதச்சார்பின்மை ஆகிய எதையும் தனியே உருவாக்க முடியாது. அவை ஒட்டு மொத்த சமூக மாற்றத்தின் அங்கமாகும். எனவே இன்றைய சமூக எதார்த்தங்களிலிருந்து துண்டிக்கப்பட்ட முறையிலான எந்தவொரு விவாதத்தையும் நாம் எதிர்க்க வேண்டும்'' என்கிறது ரெட் ஸ்டார் பத்திரிக்கை.

•ஒரு சீரான சிவில் சட்டம் என்ற பெயரில் சிறுபான்மை மக்கள் மீது இந்து சட்டத்தை திணிக்கும் முயற்சியைக் கண்டிப்பதாகக் கூறுவதுடன் தம் பணி முடிந்தது என்று சிலர் பொருள் செறிந்த முறையில் மவுனம் சாதிக்கின்றனர்.

மேற்கூறிய நிலைப்பாடுகள் மற்றும் நிலைப்பாடற்ற குழப்பங்கள் பற்றி பரிசீலிப்போம்.

## மதத்தை ஜனநாயகப்படுத்தும் முயற்சி

மனிதனின் சிவில் வாழ்க்கையின் மீது மதம் செலுத்துகின்ற அதிகாரத்தைப் பறித்து விஞ்ஞானபூர்வமான, ஜனநாயக பூர்வமான முறையில் அதை மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் மதசார்பின்மையின் சாரம்.

சிவில் வாழ்க்கையின் மீது மதம் செலுத்தும் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு, அந்தந்த மதக்கோட்பாடுகளில் உள்ள ஓரளவு முற்போக்கான அம்சங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றின் துணை கொண்டு மதச்சட்டத்தை ஜனநாயகப்படுத்தலாம் என்பது அஸ்கர் அலி எஞ்சினியரின் நிலைப்பாடு.

இந்த வழிமுறையைப் பின்பற்றி ஒருதார மணமுறைக்கு ஆதரவாகவும், முத்தலாக்கிற்கு எதிராகவும் பல ஆதாரங்களைக் குர் ஆன் மற்றும் நபிகள் நாயகம் வழங்கிய தீர்ப்புகளிலிருந்து எடுத்து எழுதுகிறார் எஞ்சினியர். வேறு பல இசுலாமிய சீர்திருத்தவாதிகளும் இவ்வாறே செய்கிறார்கள்.

அதே நூல்களிலிருந்து வேறு சில ஆதாரங்களைக் காட்டியோ, அல்லது ஒரு சொல்லுக்கு வேறு விதமாகப் பொருள் கூறியோ இவர்களுக்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள் இசுலாமியப் பழமைவாதிகள். தொடர்ந்து இவர்களுக்கிடையே நடக்கின்ற அடுத்தடுத்த சுற்று விவாதங்கள் மதநூல்களின் பொருள் விளக்க ஆய்வாக வீழ்ச்சி அடைகின்றனவேயன்றி, சமூகத்தின் தேவை குறித்த அல்லது பிரச்சினை குறித்த அறிவுபூர்வமான விவாதமாக வளர்ச்சியடைவதில்லை.

எனவே, நவீன யுகத்தின் தேவைகளுக்கு 1000, 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குர் ஆனிலோ, பைபிளிலோ, ஸ்மிருதிகளிலோ விடை இருக்கிறதா என்று தேடுவதும், அவ்வாறு இருப்பதாகக் கூறுவதும் மதத்திற்கு முற்போக்கு முலாம் பூசுவதற்கு மட்டுமே பயன்படுகிறது. இந்த முயற்சி, வரலாற்று ரீதியில் மோசடியாகவும், நடைமுறையில் கோமாளித்தனமாகவும் முடிகிறது.

இந்து மதத்தின் 'நல்ல' கோட்பாடுகளின் துணை கொண்டே அதனைச் சீர்திருத்திவிட முடியும் என்று வாதிட்ட காந்திக்கு பெரியார் அளித்த மறுப்புரை இங்கே நினைவு கூறத்தக்கது.

அடுத்து நம்பூதிரிபாடு முன்வைக்கும் தீர்வுக்கு வருவோம். ''ஜனநாயகம், சமூக



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

நீதி, ஆண்-பெண் சமத்துவம் போன்ற நவீனக் கொள்கைகளுக்கு எதிராக ஒவ்வொரு மதமும் எந்த அளவு குறுக்கிடுகிறதோ அந்த அளவுக்கு அந்தந்த மதத்தனிநபர் சட்டங்கள் திருத்தப்படவேண்டும்'' என்கிறார் நம்பூதிரிபாடு.

அதாவது சிவில் வாழ்க்கை மீது மதம் செலுத்தும் அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்காமலேயே, தனிநபர் சட்டம் என்ற பெயரில் இந்தியக் குடிமக்களின், குறிப்பாகப் பெண்களின் முதுகில் சவாரி செய்ய இந்திய அரசியல் சட்டம் மதங்களுக்கு அளித்துள்ள உரிமையைக் கேள்விக்குள்ளாக்காமலேயே, 'சர்வதர்ம சம பாவ' என்ற இந்திய மதச்சார்பின்மைக் கோட்பாட்டின் எல்லைக்குள் நின்றபடியே மதச்சட்டங்களை ஜனநாயகப் படுத்த வழி சொல்கிறார் ஈ.எம்.எஸ்.

ஆனால் மதக்கோட்பாடுகளை அறிவியல் பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்த எந்த மதவாதி ஒப்புக் கொள்வான்? மதவாதி ஒப்புக் கொள்வது இருக்கட்டும். நமது அரசியல் சட்டமே அதை ஒப்புக் கொள்ளவில்லையே. அவ்வாறு ஒப்புக் கொள்வதாக இருந்தால், 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்று கூறும் 14-வது பிரிவையும், ''பால் வேறுபாடுகளுக்காக யாரிடமும் அரசு வேற்றுமை பாராட்டக்கூடாது'' என்று கூறும் 15-வது பிரிவையும் பயன்படுத்தி மதத் தனிநபர் சட்டங்கள் அனைத்தையும் ஒழித்திருக்க முடியும்; அல்லது திருத்தியிருக்க முடியும்.

பொது ஒழுங்கு, நலவாழ்வு மற்றும் ஒழுக்க நெறி ஆகியவற்றின் அடிப்படையில் மதச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையை சட்டப்பிரிவு 25(1) அரசுக்கு அளிக்கிறது. இருந்த போதிலும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மதங்களின் தீயொழுக்கங்களை ஒழிப்பதற்கு அரசு முயலவில்லை.

இந்து தனிநபர் சட்டத்தில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள தேவதாசி ஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களும் கூட எப்படிச் செய்யப்பட்டன? இந்து மதத்தில் நிலவும் தேவதாசி முறை என்ற ஒழுக்கக்கேட்டை சட்டப்பிரிவு 25 (1) அளிக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு ஒழிக்கவில்லை. மாறாக ''தேவதாசி முறை இந்துமதத்தின் அத்தியாவசியமான நம்பிக்கை அல்ல''

**உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, நாகரிகத்தின் வளர்ச்சி, முற்போக்கான சக்திகளின் போராட்டங்கள் ஆகியவற்றின் தாக்குதலால் நிலைகுலைந்து வரும் மதம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், கடைப்பிடிக்கும் தந்திரம் தான் சீர்திருத்தம்**

என்ற மதவாதிகளின் கூற்றின் அடிப்படையில்தான் திருத்தப்பட்டது.

ஜனநாயகம், சமூகநீதி, பெண்ணுரிமை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் மதச்சட்டங்களைத் திருத்தியமைக்கலாம் என்று நம்பூதிரிபாடு முன்வைக்கும் ஆலோசனை தெரிந்தே செய்யப்படும் மோசடியாகும். இத்தகைய சட்டத்திருத்தம் எதையும் மார்க்சிஸ்டு கட்சி எம்.பிக்கள் யாரும் இன்றுவரை பாராளுமன்றத்தில் முன்மொழிந்ததில்லை என்ற உண்மை இந்தப் பித்தலாட்டத்தை மேலும் அம்பலப்படுத்துகிறது.

இது ஒருபுறமிருக்க, சிவில் வாழ்க்கை மீது மதம் செலுத்தும் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டு, அதில் சீர்திருத்தங்கள் கோருவதன் வாயிலாக மதச் சீர்திருத்தவாதியாக அவதாரம் எடுக்கிறார் நம்பூதிரிபாடு.

மதச்சார்பற்ற மதிப்பீடுகளை அளவுகோலாகக் கொண்டு மதக்கோட்பாடுகளை ஆய்வு செய்யக் கூடாது என்பது தான் மதவாதிகளின் நிலைப்பாடு. இதன்படி ஷரியத்தின் ஆணாதிக்கம் பற்றி ஒரு நாத்திகனோ, அல்லது பிற மதத்தவனோ பேசக்கூடாது.

''கருவறைக்குள் யாரை விடலாம், யாரை விடக்கூடாது என்பதை இந்துக்களாகிய நாங்கள் எங்கள் மதத்திற்குள் பேசிக் கொள்கிறோம். நாத்திகர்களான நக்சலைட்டுகளுக்கு இதில் தலையிடுவதற்கு உரிமை கிடையாது'' என்பது கருவறை நுழைவுப் போராட்டத்திற்கெதிராக இந்து முன்னணி முன்வைத்த வாதங்களில் மிக முக்கியமானதொன்று ஆகும்.

இனம், பால், வர்க்கம் என்ற முறையில் எந்த மதத்தைச் சேர்ந்த மக்களையும் அணுகவும், மதத்தின் பெயரால் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நுகத்தடிகளை அகற்றவும் மதச்சார்பற்றவர்களுக்கும் ஜனநாயகவாதிகளுக்கும் உரிமை உண்டு. இத்தகைய போராட்டத்தின் மூலம்தான் மதச்சார்பின்மை நிலைநாட்டப்படுகிறது.

மாறாக, மதச்சார்பான முறைகள் மூலம் மதச்சார்பற்ற சட்டத்தை உருவாக்க முயலும் அணுகுமுறை, இலக்கிற்கும் அதை அடைவதற்கான வழிமுறைக்கும் இடையில் உள்ள இயங்கியல் உறவை மறுதலிக்கிறது.

ரெட் ஸ்டாரின் அணுகுமுறையில் இது பிரதிபலிப்பதைக் காணலாம். ''ஒவ்வொரு மதத்தின் தனிநபர் சட்டங்களுக்குள்ளும் ஏற்படும் மாற்றம்'' என்பதை மதச்சார்பின்மையை நோக்கிய முன்னேற்றமாகச் சித்தரிக்கிறது ரெட் ஸ்டார்.

உண்மை அதுவல்ல; உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, நாகரிகத்தின் வளர்ச்சி, முற்போக்கான சக்திகளின் போராட்டங்கள் ஆகியவற்றின் தாக்குதலால் நிலைகுலைந்து வரும் மதம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், கடைப்பிடிக்கும் தந்திரம் தான் சீர்திருத்தம்.

**'சர்வ தர்ம சம பாவ' என்ற இந்திய மதச்சார்பின்மைக் கோட்பாட்டின் எல்லைக்குள் நின்றபடியே மதச்சட்டங்களை ஜனநாயகப்படுத்த வழி சொல்கிறார் ஈ.எம்.எஸ்.**



எல்லா சீர்திருத்தங்களையும் போலவே இவையும் அந்தந்த மதத்தைச் சார்ந்த மக்களுக்கு சில புதிய நிவாரணங்களை வழங்கத்தான் செய்யும். இது சீர்திருத்தத்தின் விளைவு. நோக்கம் என்ன என்பதுதான் பிரச்சினை.

பலதார மணம், தேவதாசி முறை, கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் நுழைவதற்கான தடை போன்றவற்றை இந்து சனாதனிகள்



படிப்பகம்

www.padippakam.com

முழுவதும் விலக்கிக் கொள்ளவில்லை; ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு இவை எதிராக இருக்கின்றன என்ற காரணத்தால் சட்டத்திருத்தம் செய்யவுமில்லை.

மாறாக, சிவில் வாழ்க்கை மீது மதம் செலுத்தும் அதிகாரத்தை முற்றிலுமாகப் பிடுங்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறியபோது மதப்பகைமைகளை மறந்து இந்து சனாதனிகளும், இசுலாமியப் பழமைவாதிகளும் அம்பேத்கருக்கு எதிராக ஓரணியில் திரண்டார்கள்.

கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், பண்பாடுகள் ஆகியவற்றால் ஒன்றுக்கெதிராக ஒன்று நின்று கொண்டிருந்த கூட்டத்தை 'இந்து சட்டம்' என்ற பட்டியில் அடைப்பதன் வாயிலாகத் தான் சனாதன தருமத்தைக் காப்பாற்றவியலும் என்ற நிலைமை இருந்ததால் அந்த லட்சியத்தை அடைவதற்காக சில சில்லறை சீர்திருத்தங்களுக்கு உடன்பட்டார்கள்.

இதன் துணைவிளைவாக 'முஸ்லீம் தனிநபர் சட்டம்' என்பதையும் ஏற்க வேண்டியிருக்கும் என்று தெரிந்தும் கூட மேற்படி சீர்திருத்தங்களுக்கு இந்து சனாதனிகள் உடன்படக் காரணம் ஒன்றுதான். மதசார்பற்ற சிவில் சட்டம் என்ற பேயிடமிருந்து இந்து மதத்தைக் காப்பாற்றுவது தான் அது.

இனி பாகிஸ்தானின் உதாரணத்தைக் காண்போம். 'மதசார்பற்ற' இந்தியாவின் முஸ்லீம் தனிநபர் சட்டம் 'முத்தலாக்' முறையிலான மணவிலக்கை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இசுலாமியக் குடியரசான பாகிஸ்தானிலோ முத்தலாக் மணவிலக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இசுலாமியப் பெண்களுக்கு ஆதரவான இந்த நிலை மதசார்பற்ற ஜனநாயக மதிப்பீடுகளின் பால் பாகிஸ்தான் அரசுக்கும் மதவாதிகளுக்கும் உள்ள காதலைக் காட்டுகிறதா, அல்லது மதசார்பற்ற அரசாக மாறிவிடாமல் தடுப்பதற்கு அவர்கள் கொண்டிருக்கும் எச்சரிக்கையுணர்வைக் காட்டுகிறதா?

ஆளும் வர்க்கங்கள் மற்றும் பிற்போக்கு மதவாத சக்திகளின் இத்தகைய சூழ்ச்சிகளைக் கண்டு புரட்சியாளர்களுக்குரிய எச்சரிக்கையுணர்வைப் பெறுவதற்குப் பதிலாக சீர்திருத்தவாதிகளைப் போல மகிழ்ச்சி அடைகிறது, ரெட் ஸ்டார்.

மதச் சட்டங்களைச் சீர்திருத்தி ஜனநாயகப்படுத்தும் வித்தையும், நரியைப் பரியாக்கும் வித்தையும் ஒன்றே. நரியைப் பரியாக்குவதாக நம்பூதிரி கூறுவதில் வியப்பில்லை; நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் என்று கூறிக் கொள்ளும் சிலரும் அதே நம்பிக்கையைக் கொண்டிருப்பதுதான் வேடிக்கை!

தொடரும்

## ஜெயா - சசி கும்பல் கொள்ளையடித்த சொத்துக்களைப் பறிமுதல் செய்! கைது செய்! தண்டனை கொடு!

## தஞ்சை-வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம் - ஜூலை 10

**அன்பார்ந்த உழைக்கும் மக்களே,**

ஜெயலலிதா சசிகலா கும்பலிடமிருந்து ஆட்சியதிகாரத்தைப் பிடுங்கி விட்டார்கள் தமிழக மக்கள். ஆனால் கோடி கோடியாய் அவர்கள் கொள்ளையடித்த மக்கள் சொத்துக்களை யார் பிடுங்குவது? என்றைக்குப் பிடுங்குவது? ஜெயா கும்பலை தண்டிக்கக் கோரினால், 'பழிவாங்க மாட்டோம்' என்றும் 'சட்டம் அதன் கடமையைச் செய்யும்' என்றும், பெருந்தன்மையாகப் பேசுகிறார் முதல்வர் கருணாநிதி. தண்டிக்காமல் விடுவதற்கும் மன்னிப்பதற்கும் இது இவர்களுடைய தனிப்பட்ட விவகாரம் அல்ல; கொள்ளையடிக்கப்பட்டதும், கொடுமைக்கு உள்ளானதும் தமிழக மக்கள்.

தமிழகத்தையே தங்கள் பரம்பரை சொத்தாகவும், அரசு கஜானாவைத் தங்கள் சொந்தப் பணப்பெட்டியாகவும் மாற்றிக் கொண்ட ஜெயா - சசி கும்பலுக்கு தேர்தல் தோல்விதான் தண்டனையா?

'பொது வாழ்வில் ஈடுபடுவதே பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கத் தான்' என்ற இழிந்த நிலைக்கு தமிழ்நாட்டின் அரசியல் பண்பாட்டைத் தள்ளிய கும்பலுக்கு என்ன தண்டனை?

சட்டத்தின் காவலர்கள் என்று கூறிக் கொண்டு வழக்கறிஞர்களையும், பத்திரிகையாளர்களையும், எதிர்க்கட்சிக்காரர்களையும் தாக்குவதற்கும், கொலை செய்வதற்கும் அதிமுக ரவுடிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிய போலீசு அதிகாரிகளுக்கும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் என்ன தண்டனை?

அந்நியச் செலாவணித் திருடனுக்கும், ரவுடிக்கும் 'நெஞ்சு வலி' என்று போலிச் சான்றிதழ் தந்து அரசு மருத்துவமனையின் குளுகுளு அறையில் வைத்துப் பாதுகாத்த மருத்துவ அதிகாரிகளுக்கு என்ன தண்டனை?

தேவாரத்திற்கும், ஹரிபாஸ்கருக்கும் பதவி மாற்றம் தான் தண்டனையா? இல்லை. இந்த அநீதியை நாம் அனுமதிக்க முடியாது. இந்த அவமானத்தை நாம் சகிக்க முடியாது.

ஜெயா - சசி கும்பல் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் குவித்து வைத்துள்ள எல்லா சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும். ஜெயா - சசி கும்பலுக்குக் கையூட்டுக் கொடுத்து, தாபர் - டூபாண்ட், ஃபோர்டு மோட்டார் போன்ற அமெரிக்கக் கம்பெனிகள் தமிழகத்தில் தொழில் நடத்துவதற்கு பெற்றுள்ள உரிமங்கள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும். நாட்டை மீண்டும் காலனியாக்கும் அனைத்து ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்படவேண்டும்.

ஜெயா - சசிகலா கும்பல் உருவாக்கிய 'போலீசு - பினாமி முதலாளிகள் - அதிகார வர்க்கம் - கிரிமினல்கள்' அடங்கிய கும்பல் பகிரங்கமாக விசாரித்துத் தண்டிக்கப்படவேண்டும். இனி மக்கள் சொத்தைக் கொள்ளையடிக்க எண்ணும் எவனுக்கும் ஜெ - சசி கும்பலுக்கு வழங்கப்படும் தண்டனை ஒரு பாடமாக அமையவேண்டும்.

சட்டம் தானாகவே தன் கடமையைச் செய்ததாக வரலாறில்லை. கொள்ளையடிக்கப்பட்ட தமது சொத்துக்களை மீட்கும் உரிமையும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் உரிமையும் மக்களுக்கு உண்டு. இதை நிறுவுவதற்கான ஒரு முன்மாதிரி நடவடிக்கைதான் ஜெ - சசி கும்பலின் பினாமி சொத்தான தஞ்சை வினோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம்.

**போராட வாருங்கள்!** **போராட்ட நிதி தாருங்கள்!**

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி**

தொடர்புக்கு: தமிழ்மணி, உதயசூரியன் தேநீர் விடுதி, காந்திபுரம், திருச்சி - 18



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியனும் இந்தியரும்

நொறுங்கிக் கொண்டிருக்கும் அரசியல், சமூக நிறுவனங்களை அள்ளி நிறுத்துவதற்கு ஆளும் வர்க்கங்கள் பல முனைகளிலிருந்தும் செய்யும் பகீரத முயற்சிகள் பார்ப்பதற்கு மிகவும் சுவாரசியமாகத்தான் இருக்கின்றன. இந்திய ஜனநாயகத்தின் பரிணாம வீழ்ச்சி முப்பரிமாணத்தில் டெல்லியில் அரங்கேறிக் கொண்டிருக்கும்போதே, இந்தியன் திரைப்படம் அரங்கு நிறைந்த காட்சிகளாக இரண்டு பரிமாணத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

வாஜ்பாயி, தேவகவுடா போன்ற இந்தியத் தாத்தாக்கள் லஞ்சம் கொடுப்பதற்காக கையில் சூட்கேசுடன் அலைந்து கொண்டிருக்கையில், லஞ்சம் வாங்குபவர்களைத் தேடிக் கையில் கத்தியுடன் அலைகிறார் 'இந்தியன்' தாத்தா.

''இந்தியன் படத்தில் ஊழல் செய்பவர்களை இந்தியன் தாத்தா கொலை செய்வதாகக் காட்டப்படுகிறது. ஆனால் இந்தியன் படத்தைப் பார்க்க 50 ரூபாய் 100 ரூபாய் கொடுத்து பிளாக்கில் டிக்கெட் வாங்க வேண்டியிருக்கிறதே அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று படத்தின் இயக்குனர் சங்கரிடம் கேட்டால்,

''ஜனநாயக நாட்டில் இப்படிச் சில கள்ள மார்க்கெட் வியாபாரம் தலை தூக்கவே செய்யும். அதைச் சட்டபூர்வமாகத் தண்டிக்க முடியுமே தவிர ஒழிக்க முடியாது... ஊழல் விவகாரத்தில் 10 சதவீதம் வெற்றி கிடைத்தாலே போதும்'' என்று சொல்லிச் சிரிக்கிறாராம்.

ஊழல் பேர்வழிகளின் நிழல்கள் கத்தியால் குத்தப்பட்டு விழுவதைக் கண்டு அரங்கம் ஆர்ப்பரிக்கும் அதே நேரத்தில், அவை நிஜமாகவே அமல்படுத்தப்படுவதைக் காட்டி ஆளும் வர்க்கப் பத்திரிக்கைகளும், அறிஞர்களும் அகமகிழ்கிறார்கள்.

''பாருங்கள்! என்ன இருந்தாலும் கடைசியில் சட்டம் தன் கடமையைச் செய்யத் தொடங்கிவிட்டது. சந்திராசாமி கைது, சசிகலா கைது, நரசிம்மராவ் மகன் மீது விசாரணை, மருமகன் மீது விசாரணை...! இந்திய ஜனநாயகம் அழுகி நாறுவதாக யார் சொன்னது? இதோ அது கனிந்து மணம் பரப்புவதைப் பாருங்கள்!''

''ஏவினால் குரைத்து, அதட்டினால் அடங்கும் நாயாக மத்திய உளவுத் துறை ஒரு காலத்தில் இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் அது சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்படும்பொழுது அதன் திறமையைப் பாருங்கள்! ஊழலை ஒழிக்க முடியாவிட்டாலும் ஊழல் பேர்வழிகளின் மனதில் ஒரு பயத்தையாவது உருவாக்க முடிந்தால் அது வெற்றி





தானே!'' என்று மிடுக்காகத் தலையங்கம் அழுதுகிறார்கள். இந்தியன் தாத்தாவும் இதே வசனத்தைத் தான் நிழலுருவில் பேசுகிறார்.

பயம்! பயம் என்ற சொல்லின் முழுப்பொருளை தேவகவுடாவைத் தவிர வேறு யார் அதிகமாக உணர்ந்திருக்க முடியும்? நரசிம்மராவின் நிழல் மந்திரி சபையின் அசைவுக்கேற்ப நகர்கிறது நிஜ மந்திரி சபை. கத்தியை எப்போது செருகலாம் என்று மூத்த இந்தியத் தாத்தாவான நரசிம்மராவ் யோசித்துக் கொண்டிருக்கையில், உண்மையில் பயந்துகொண்டிருப்பவர்கள் யார்?

கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தின் துணை கொண்டு அற்பத்தனமான முறையில் இந்தியன் திரைப்படத்தில் சித்தரிக்கப்படும் உருமாற்றங்களைப் போலவே, தேசியவாதிகளாக உருமாற்றம் பெற்றிருக்கும் மாநிலக் கட்சிகளும் அவர்களது கூட்டணி ஆட்சியும்தான் ஊழல் பிதாமகனைக் கண்டு, நடுங்கிக் கொண்டிருக்கின்றன.

காதல், வீரம், சிரிப்பு, சோகம், வேகம், சென்டிமென்ட் என்று எல்லாவற்றையும் இரண்டரை மணி நேரத்திற்குள் சரிவிகிதத்தில் கலந்து தரவேண்டிய வியாபார நிர்ப்பந்தம் இருந்தாலும், நடுவில் ஏதாவது ஒரு நல்ல விசயத்தைச் சொல்ல வேண்டுமென்பதால் தேசபக்தியை ஒரு அம்சமாக தன் படங்களில் வைக்கிறாராம் தேசபக்தகிங் அர்ஜுன்.

ஜனதா தளத்தை எதிர்த்த திமுக, திமுகவை எதிர்த்த மார்க்சிஸ்டு, தெலுங்கு தேசத்தை எதிர்த்த வ. கம்யூனிஸ்டு, அனைவரையும் எதிர்த்த காங்கிரசு ஆகியோரெல்லாம் சேர்ந்து ஒரு கூட்டணியை உருவாக்கியிருந்தாலும், அதாவது கூட்டணியை உருவாக்க வேண்டிய 'வியாபார நிர்ப்பந்தம்' இருந்தாலும், ஹவாலா புகழ் பொம்மையும் சரத் யாதவும் அமைச்சரவையில் இருந்தாலும், 'இந்தியன்' படத்தின் ஊழல் ஒழிப்பு போல இதிலும் ஒரு நல்ல விசயம் இருக்கிறது பாருங்கள் என்று நம்பிக்கையூட்டுகின்றன பத்திரிகைகள்.

இந்தியன் தாத்தாவுக்கு மேக் அப் போடுவதற்கு அமெரிக்காவிலிருந்து மேக் - அப் மேன் வந்தாராம். ஒருமுறை மேக் - அப் போட 5 மணி நேரம் ஆயிற்றாம். ஆனால் படப்பிடிப்பு தொடங்கி 1, 1/2 மணிநேரம் ஆனவுடன் மேக் - அப் கலையத் தொடங்கி விடுமாம்.

பத்திரிகைகளும், ஆளும் வர்க்க அறிஞர்களும் இந்த அரசமைப்புக்குப் போடும் மேக்-அப் எத்தனை நாள் தாக்குப் பிடிக்கப் போகிறது, பார்ப்போம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: இரா. சண்முகராசு, எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும்

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N. 42647/87 REGD. NO. TN/MS(N) / 942

# அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கம்

## அன்பார்ந்த உழைக்கும் மக்களே! பண்பாட்டு ஆர்வலர்களே!

வசந்தத்தின் இடி முழக்கமாகத் தோன்றிய நக்சல்பாரி உழவர் எழுச்சி இந்திய அரசியல் வானில் புரட்சிகரப் பொதுவுடைமை இயக்கத்தைத் தோற்றுவித்தது. அந்தப் புரட்சி இயக்கத்தின் பண்பாட்டுப் படைகளாக நாடெங்கும் இயங்கிக் கொண்டிருந்த பண்பாட்டு அமைப்புகளை ஒருங்கிணைத்துத் தோற்றுவிக்கப்பட்ட அனைத்திந்தியப் புரட்சிப் பண்பாட்டு இயக்கம் (ALL INDIA LEAGUE FOR REVOLUTIONARY CULTURE) தனது 6-வது மாநாட்டை ஆகஸ்டு 9.10.11 தேதிகளில் சென்னையில் நடத்தவிருக்கிறது.

இம்மாநாடு நடைபெறுகின்ற தருணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நடந்து முடிந்த பாராளுமன்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்கு கேட்கச் சென்ற வேட்பாளர்களை அடித்து விரட்டியதன் மூலம் ஆளும் கட்சிக்கெதிரான கோபத்தை மட்டுமல்ல, ஓட்டுச்சீட்டு அரசியலுக்கு எதிரான தங்கள் வெறுப்பையும் தமிழக மக்கள் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆந்திரா, தண்டகாரண்யா, பீகாரில் வளர்ந்து வரும் நக்சல்பாரி இயக்கத்தையும், காஷ்மீரிலும் வடகிழக்கிந்திய மாநிலங்களிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் நடக்கும் தேசிய இன உரிமைக்கான, விடுதலைக்கான போராட்டங்களையும் இரும்புக் கரம் கொண்டு நசுக்குகின்றனர். இருப்பினும் இந்த இயக்கங்கள் எழுச்சியுடன் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

அதே நேரத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளால் உருவாக்கப்பட்டுள்ள உலக வர்த்தகக் கழகம், காட் ஒப்பந்தம் அவற்றின் ஆணைகளை நிறைவேற்ற அமல்படுத்தப்படும் புதிய பொருளாதாரக் கொள்கை ஆகியவை பெயரளவிலான இறையாண்மையையும் பறித்து ஒட்டாண்டியாக்கும் திசையில் நாட்டைக் கொண்டு செல்கின்றன. இந்தத் துரோக ஒப்பந்தத்தை அமல்படுத்துவதில் ஓட்டுக் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்றன.

அரசியல் பொருளாதாரத் தாக்குதல்கள் ஒருபுறமிருக்க பண்பாட்டுத் துறையில் ஏகாதிபத்தியங்கள் நடத்திவரும் உலகு தழுவிய தாக்குதல் நம் நாட்டையும் சீர்குலைத்து வருகிறது. தேசிய இனங்களின் மொழி, பண்பாடு ஆகியவை அழிக்கப்பட்டு 'சர்வதேசிய ஏகாதிபத்திய சீரழிவுப் பண்பாடு' பரப்பப்படுகிறது.

இன்னொருபுறம் இந்துமத வெறி பாசிச சக்திகள் வேகமாகத் தலையெடுத்து வருகின்றன. சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு எதிரான மதக் கலவரங்களும், தாழ்த்தப்பட்டோர் மீதான சாதி வெறித்தாக்குதலும் அதிகரித்து வருகின்றன.

இத்தகையதொரு சூழலில் நடத்தப்படும் இம்மாநாடு "பண்பாட்டின் மீதான ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்கள்" என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது. பல அறிஞர்கள் பங்கேற்று உரையாற்றவிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஓவியக் காட்சி நடத்தவுள்ளார்கள். ஆகஸ்டு 9, 10 தேதிகளில் பொது மாநாடு, பண்பாட்டுப் பேரணி, பொதுக் கூட்டம் ஆகியவை நடைபெற உள்ளன.

தமிழகத்தின் எழுத்தாளர்களும், கலைஞர்களும், ஓவியர்களும், அறிஞர்களும் உழைக்கும் மக்களும் இம்மாநாட்டில் பங்கேற்க அழைக்கிறோம். மாநாடு வெற்றி பெற தாராளமாக நன்கொடை அளித்து உதவக் கோருகிறோம்.

AILRC

**ஏகாதிபத்திய – நிலப்பிரபுத்துவப் பண்பாட்டை வீழ்த்துவோம்!**
**இந்து மதவெறி பாசிசப் பண்பாட்டை முறியடிப்போம்!**
**புதிய ஜனநாயகப் பண்பாட்டுக்காகப் போராடுவோம்!**

## அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் பங்கு பெறும் உறுப்பு அமைப்புகள்

- மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு (PALA)
- மக்கள் பண்பாட்டுப் பேரவை, தமிழ்நாடு (MPP)
- மக்கள் கலை மன்றம், தமிழ்நாடு (PAF)
- ஜன கலா சாகித்யவேதி, கேரளம், (JKSV)
- ஜன கலா மண்டலி, கருநாடகம் (JKM)
- ஆவாகன் நாட்டிய மஞ்ச், மகாராட்டிரம் (ANM)
- ஆவாகன் நாட்டிய மஞ்ச், பம்பாய்
- விப்லவ ரசயிதல சங்கம், ஆந்திரம் (RWA)
- ஜன நாட்டிய மண்டலி, ஆந்திரம் (JNM)
- பூர்வாஞ்சல், உத்திரப்பிரதேசம்
- ஜன சமஸ்கிருதி நாட்டிய மஞ்ச், குஜராத் (JSNM)
- விகல்ப், டெல்லி
- அ.இ.பு.ப.இ., டெல்லிக்கிளை
- கிராந்திகாரி புத்திஜீவி சங், பீகார் (KBS)
- கிராந்திகாரி சமஸ்கிருதி சங், பீகார் (KSS)
- Revoluntary Writers And Intellectuals Association, West Bengal
- கிராந்திகாரி சாகித் சபா, பஞ்சாப் (KSS)
- சசேதன் சதீர்த்த, அஸ்ஸாம் (SS)

**ஆறாவது மாநாடு 1996**
**ஆகஸ்டு 9,10,11,**
**சென்னை.**

**இடம்: அண்ணா அரங்கம்,**
**உதயம் திரையரங்கு எதிரில்,**
**கே.கே. நகர், சென்னை – 78.**

படிப்பகம்